Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :45 மார்கழி 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 10 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050

## தமிழாராய்ச்சி படுகொலை நினைவலை

யாழ்ப்பாணம், ஜன. 10
தமிழாராய்ச்சி மாநாட்டில் படு கொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 46ஆம் ஆண்டு நினைவஞ்சலி இன்று 23

## 14,022 குடும்பங்களுக்கு புதிய வீடுகள்!

கொழும்பு, ஜன. 10
நாடு முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட 14 ஆயிரத்து 22 வறிய குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைதிட்டத்தை அரசு இந்த வருடம் ஜனவரி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். 23

# தமிழர் விரும்பும் தீர்வை ஒருபோதும் கொடோம்!

### கோத்தா அரசு இறுமாப்பு



கொழும்பு, ஜனவரி 10
எமது நாட்டின் இறையாண்மையையும் ஒற்றையாட்சியையும் நாம் பாதுகாத்தே ஆக வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை விட்டுக்கொடுக்கவே முடியாது. எனவே, அதற்கமைய அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும்' இவ்வாறு நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். 23

## இன்று ஓநாய் சந்திர கிரகணம்

யாழ்ப்பாணம், ஜன. 10
இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் இன்று நிகழ இருக்கிறது. இந்த சந்திர கிரகணத்துக்கு நாசா 'ஓநாய் சந்திர கிரகணம்' என்ற பெயரைச் சூட்டியுள்ளது.
சந்திர கிரகணம் என்பது நிலவுக்கும், சூரியனுக்கும் இடையே புவி கடக்கும்போது நடக்கும் ஒரு நிகழ்வாகும். இந்த சந்திர கிரகணத் 23

## எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது!

கொழும்பு, ஜன. 10
ஈரான் - அமெரிக்க போர்ப் 23



## முன்னணிக்குள் பூசல் மற்றுமொரு அடிதடி!

### சபை மரபை மீறி காட்டுமிராண்டித்தனம்

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வு நேற்று இடம்பெற்ற நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தமக்கிடையே உள்ள உள்ளக முரண்பாட்டால் 'அடிபட்டு' பகிரங்கமாக மோதிக்கொண்டனர்.
யாழ்ப்பாணம் மாநகர சபை 23

### தொல்லியல் திணைக்களத்தால்

## அடாத்தாக 52 இடங்கள் யாழில் ஆக்கிரமிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொல்லியல் திணைக்களத்தால் 52 இடங்கள் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. எவ்வித வர்த்தமானி அறிவித்தலும் இல்லாமலேயே மேற்குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று உறுதி செய்யப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.
யாழ். மாவட்டத்தில் மட்டும் 109 இடங் 23

## சிங்கள மாணவர்கள் வீட்டில் வாள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவர்கள் தங்கியிருக்கும் வீடொன்றிலிருந்து வாள் மீட்கப்பட்டுள்ளது. எனி 23

### சாதிச் சண்டை, வசை மழை,போத்தல் வீச்சு

## ரணகளமானது மாநகரசபை!

யாழ்ப்பாணம், ஜன.10
முகநூலில் பதிவிட்ட ஒரு விடயத்தினை சாதிய ரீதியிலான பதிவாகக் கூறிச் சபையில் சர்ச்சையில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி உறுப்பினரால் மாநகர சபையின் நேற்றைய அமர்வில் பெரும் களேபரம் ஏற்பட்டது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் மாநகர முதல்வர் இ. ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது. 23

### முச்சந்தி முரளி



"முழுக் குப்பையும் முனிசிப்பல் கவுன்சிலுக்குதான் போல...!"


சிறுக சிறுக சேமித்து உங்கள் எதிர்காலத்தை வளமானதாக்குங்கள்
DFCC ஜூனியர் சிறுவர் சேமிப்புக் கணக்கில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்தால், புதிய வருடத்தில் முதலாம் தவணைக்காக பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியும், தண்ணீர்ப் போத்தலும் பரிசாக வழங்கப்படும்.
ஒவ்வொரு பண வைப்புகளுக்கும் ஜூனியர் கணக்கில் மேலும் பல பெறுமதிமிக்க பரிசுகளையும் பெறும் வாய்ப்பு உங்களுக்குண்டு.
இந்தச் சலுகை 2019 டிசெம்பர் 15 முதல் 2020 ஜனவரி 15 வரை மட்டுமே.
DFCC ஜூனியர்
24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## மகள் இறந்த நிலையில் தன்னையும் மாய்க்க தீ மூட்டினார் தாய்!

யாழ்ப்பாணம், ஜன. 10

மகள் இறந்த நிலையில் தன்னையும் மாய்த்துக் கொள்வதற்காகத் தீமூட்டிய தாய் ஆபத்தான நிலையில் உள்ளார். யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன்தினம் மாணவியொருவரின் சடலம் மீட்கப்பட்டது. காதல் தோல்வியால் அவர் தூக்கிட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகள் இந்த துக்கம் தாங்காமல் அவரின் தாயார் தனக்குத்தானே தீ முட்டியுள்ளார். அவர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ம-26)



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று கோலாகலமாக இடம்பெற்றது. (ம –131)

## விவசாய உற்பத்திகளின் விலைகள் வீழ்கின்றது

*கொழும்பு, ஜன. 10*

*விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைகளை எதிர் வரும் ஏப்ரல் மாதம் குறைப்பதற்கு விவசாய அமைச்சு மற்றும் வாழ்க்கைச் செலவுக்குழுவுடன் இணைந்து ஏனைய அமைச்சுக்கள் தீர்மானம் மேற்கொண்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.*



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாரும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதனடிப்படையில் உள்ளூர் உற்பத்தியை அதிகரித்து அவற்றுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொடுப்பதற்கு நேற்றைய அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த அரசில் பல விவசாய பொருட்களின் உற்பத்திகள் தடைப் பட்டன. இதனால் பெருமளவு இறக்குமதியில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே தற்போது நாட்டில் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும் நிதிப் பற்றாக்குறை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக அத்திட்டம் கைகூடாமல் போனது.

அதனால் 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் வளமான விவசாய தயாரிப்பு தொகுதி கிராமத்தை நிறுவும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உள்நாட்டில் பயிரிடக்கூடிய அனைத்து வகையான விவசாய உற்பத்திப் பொருட்களும் பயிர் செய்யப்படுவதுடன் அதற்காக விவசாயிகளுக்கு நியாயமான விலை பெற்றுக் கொடுக்கப்படும். மேலும் பயிர்களின் விளைச்சலை அதிகரித்தல், பெறுமதி மிக்க பயிர்களை அறிமுகப்படுத்தல், ஆய்வுகளை முன்னெடுத்தல், விலங்கு களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்தல், சுற்றாடலுக்குபொருத்தமானவிவசாயத்தை ஊக்குவித்தல் ஆகிய அம்சங்கள் இத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சர் விளக்கமளித்தார்.

(ம-24)

### உணவகத்தை மூட உத்தரவு

துணுக்காய்,ஜன.10

மாங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் இயங்கிய உணவகத்தை மூடுமாறு உத்தரவிடப்பட்டது. பொது சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய திருப்திகரமான முறையில் உணவகத்தில் திருத்தங்கள் செய்யும் வரை நிலையத்தை மூடுமாறும், 49 ஆயிரம் ரூபா தண்டம் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் வி.விஜயங்கரன் உணவகம் மீது நடத்திய திடீர் பரிசோதனையின் போது உணவகம் சுகாதாரக் குறைபாட்டுடன் காணப்பட்டமையால் உணவக உரிமையாளருக்கு எதிராக, தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத்துவச் சான்றிதழ் இன்மை, உணவக இடப்பரப்பினுள் நாய் வைத்திருந்தமை, பீடைகள் உருவாகக் கூடிய வகையில் உணவகத்தை வைத்திருந்தமை உள்ளிட்ட 7 குற்றச்சாட்டுக்களுடன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் துணுக்காய் சுற்றுலா நீதி மன்றில் நேற்று முன்தினம் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

உணவக உரிமையாளர் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டதுடன், உணவகத்தை மூடுமாறும் உத்தரவிடப்பட்டது.

(க-9)

### வர்த்தகரிடம் வழிப்பறி!

சாவகச்சேரி ஜன. 10

நண்பரைக் காணச் சென்ற வர்த்தகர் ஒருவர் தான் அணிந்திருந்த 3 தங்க மோதிரங்களையும் ,பணத்தையும் அலைபேசியையும் ,கொள்ளையர்களிடம் பறிகொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் மீசாலை கனகன்புளியடி வீதி, வேம்பிராயில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

குறித்த வர்த்தகர், மீசாலை வடக்கில் உள்ள நண்பரைக் காண, இரவு 7.00 மணியளவில் சென்றுள்ளார். மீசாலை கனகன்புளியடி வீதியில்,வேம்பிராய் பகுதியில் உள்ள வாகனம் திருத்தும் இடம் ஒன்றின் முன்னால் நின்று இருவர் வர்த்தகர் பயணித்த மோட்டார் சைக்கிளை மறித்தனர். பின்னர் அவரை அச்சுறுத்தி அவர் அணிந்திருந்த தங்க மோதிரங்களையும் சட்டைப் பைக்குள் வைத்திருந்த அலைபேசி மற்றும் பணம் ஆகியவற்றையும் அபகரித்துக் கொண்டு கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர்.

இது குறித்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(அ,ந-9)



### ஊடகர் லசந்தவின் நினைவலை

கொழும்பு, ஜன. 10

சண்டே லீடர், மோனிங் லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், சிரேஸ்ட ஊடகவியலாளரும், பிரபல சட்டத்தரணியுமான லசந்த விக்ரமதுங்கவின் 11ஆவது நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள ஊடகவியலாளர் நினைவுத் தூபி முன்பாக இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ண குமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

(ம)

### நினைவஞ்சலி நிகழ்வு

காரைநகர்,ஜன.10

பேராசிரியர் கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன்கென்னடியின் 2 ஆம்வருடநினைவஞ்சலி நிகழ்வு காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

## யாழ். போதனா மருத்துவமனைக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். போதனா மருத்துவமனையில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பணி புரிகின்றார்கள். வைத்தியசாலையின் நற்பெயருக்கு அவதூறு ஏற்படும் வண்ணம் சில இணையத் தளங்கள் செய்திகளைப் பிரசுரித்துத் தங்களை விளம்பரப்படுத்த முனைகின்றன - என்று குற்றஞ்சாட்டியுள்ளார் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: வைத்தியசாலை பற்றிய செய்திகள் போலியாகப் புனையப்பட்டு தற்போது வலம் வருகின்றன. இவ்வாறான செய்திகள் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் சேவைக்குக் களங்கம் விளைவிக்கும் செயல்களாகும்.

வைத்தியசாலையில் உள்ள தனிப்பட்ட குரோதங்களை வைத்து வதந்திகளைச் செய்திகளாக்குவது மிகவும் மனவேதனைக்குரியதாகும். வைத்தியசாலையில் நிகழும் குற்றங்கள், தவறுகளை முறைப்படி பணிப்பாளர் அல்லது நிர்வாகத்தினரிடம் அறிவித்து அதற்கான விசாரணை மேற்கொள்ள முடியும். உரிய நிவாரணத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் - என்றுள்ளது.

(ம)




படங்கள் ஐ.சிவசாந்தன்

# எரிபொருளுக்கு 'கியூ'

## போக்குவரத்து நெரிசல்

*யாழ்ப்பாணம், ஜன. 10*

**அமெரிக்க இராணுவத்தினர் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதையடுத்து சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்தது. இந்த நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் நீண்ட வரிசையில் நின்று எரிபொருள்களை மக்கள் கொள்வனவு செய்தனர். இந்த நிலைமை நேற்று மாலை வரை தொடர்ந்தது.**



ஈரானின் இராணுவத் தளபதி சுலைமானி அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்தார். இதற்குப் பதிலடியாக இரண்டு தினங்களுக்கு முன்னர் ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ நிலைகள் மீது ஈரான் தாக்குதலை நடத்தியது.

இந்தப் போர்ச் சூழல் தொடர்பான செய்திகளை அறிந்த மக்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குப் படையெடுக்கத் தொடங்கினர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை மக்கள் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் மொய்க்கத் தொடங்கினர்.

ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது. பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற அனைத்து எரிபொருள்களையும் பெற்றுக் கொள்ள வரிசையில் மணிக்கணக்கில் காத்து நின்றனர்.

மோட்டார் சைக்கிள், ஓட்டோ, கார், பஸ், டிப்பர் என்று பலதரப்பட்ட வாகனங்களும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்றமையால், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடான வீதிப் போக்குவரத்தும் பெரும் பாதிப்புக்கும், நெரிசலுக்கும் உள்ளானது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இந்த நிலைமை காணப்பட்டபோதும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலைமை சுமூகமாக இருந்தது.

(ஒ.5,6,246,110,213,159,17)

# மேயர் கைது



கொழும்பு ஜன. 10

மாத்தளை மாநகர சபையின் மேயர் டல்ஜித் அலுவிஹார பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாநகர சபை உறுப்பினர் ஒருவரை நேற்றுமுன்தினம் தாக்கிய சம்பவம் தொடர்பில் அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.5)

# வடக்கு ஆளுநருடன் யாழ். மேயர் சந்திப்பு



*யாழ்ப்பாணம், ஜன.10*

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸுக்கும், யாழ்ப்பாணம் மாநகர நபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட்டுக்கும் இடையே நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநருக்கு, மாநகர சபை முதல்வர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்பாக ஆளுநர் கேட்டறிந்து கொண்டார். மாநகர சபையின் செயற்றிட்டங்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக வடக்கு ஆளுநருக்கு, யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் விளக்கினார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் பிரத்தியேகச் செயலர் ஆகியோரும் பங்கு கொண்டனர். சந்திப்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சார்பில் நினைவுச் சின்னம் ஒன்றும் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. (ஐ)

# 30 போத்தல் சாராயம் மீட்பு

கிளிநொச்சி, ஜன. 10

அனுமதி இன்றி வீட்டில் வைத்து சாராயம் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். அவருடைய வீட்டிலிருந்து 30 சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (து-6)

## கைகலப்பில் மாணவர் காயம்

*முல்லைத்தீவு, ஜன.10*

முல்லைத்தீவு, முள்ளியவளையில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் மாணவன் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இரு மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. காயமடைந்த மாணவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டது. (எ-ரி3)

## சாரதிகளுக்கு தண்டம்

சாரதிகள் 6 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 2 லட்சத்து 54 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கட்டது. கொடிகாமம் பொலிஸாரால் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஆறு சாரதிகளுக்கு எதிராகவும், ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு எதிராகவும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து மதுபோதையில் பயணித்த ஆறு சாரதிகளுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாவும், ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 52 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஜ-9)

# எரிபொருள் போதியளவு தற்போது கையிருப்பில்

## பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்தியக் கிளை தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 10*

எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது. எரிபொருளுக்கு எந்தவித தட்டுப்பாடும் ஏற்படவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்தியக் கிளையினர் தெரிவித்தனர்.

வளைகுடாப் பகுதியில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினரைக் கேட்டபோது;

எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது. மக்கள் வீணாக ஒரே நாளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குவிந்துள்ளனர். விநியோகத்துக்கான எரிபொருள் தொடர்ச்சியாக வடக்குக்கு கொண்டு வரப்படுகின்றது என்று தெரிவித்தனர். (ஒ.5)

## ஆசிரியருக்கு விளக்கமறியல்



*வவுனியா, ஜன. 10*

வவுனியாவில் ஆசிரியர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

மாணவி ஒருவரை துஷ்பிரயோகம் செய்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

செட்டிகுளம் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டதும் ஆசிரியரை நேற்றுமுன்தினம் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவர் கட்சி ஒன்றின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-110,18)

# உலகத் தமிழ்

## பண்பாட்டு மையத்துக்கு ஆர்வம் உள்ளவர்கள் இணைந்துகொள்ளுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தில் இணைய ஆர்வமுள்ளவர்கள் வந்து பதிவு செய்யுங்கள் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையை மையமாகக்கொண்டு தெல்லிப்பளை மாவிட்டபுரம் பிரதான வீதியில் இயங்கும் மையத்தின் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளுங்கள் என்று அதன் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்தார்.

ஆர்வமுள்ள சகல வயதுப் பிரிவினரையும் குறுகியகால இடைவெளியில் ஆள்சேர்ப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே வடக்கு மாகாணத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தில் சேரவிருப்பமுள்ள, ஆர்வமுள்ளவர்கள் தமது ஆள் அடையாள அட்டையுடன் எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் மாலை 3 மணிமுதல் 6மணி வரை நேரடியாக மையத்துக்கு வந்து பதிவுசெய்ய முடியும்.

இதன் நிர்வாகச் செயலராக மாவை சோ. செல்வரத்தினம் உள்ளார். அவரிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும். அதற்குரிய படிவங்களைப் பெற்று சாதாரணஅல்லது ஆயுள் அங்கத்துவத்தைப் பெற்றுப் பொதுப் பணியை ஆற்றுவதற்கு இணைந்துகொள்ளலாம். என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-50)

# தீர்வைவிட அபிவிருத்திதான் தமிழ் மக்களுக்கு அவசியம்!

## சம்பந்தனுக்கு மஹிந்த பதில் கருத்து



கொழும்பு, ஜன. 10

'அதிகாரப் பகிர்வு குறித்து சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகும் என்று இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தப்புக்கணக்குப் போடக்கூடாது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அபிவிருத்திதான் மிகவும் அவசியம்' இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

'அதிகாரப் பகிர்வு குறித்து சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச முதலீடுகள், அபிவிருத்திகள் என அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

'நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசியல் தீர்வுக்கான எமது பணிகள் ஆரம்பமாகும். மூவின மக்களுக்கும் சம உரிமையுடனான தீர்வை நாம் பெற்றுக்கொடுப்போம். அந்தத் தீர்வு சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வாக இருக்கும். ஏனெனில் கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கி ரணில் தலைமையில் தலைவிரித்தாடிய ஊழல், மோசடி ஆட்சியை மாற்றியமைத்ததில் சிங்கள மக்களுக்குப் பெரும் பங்குண்டு. அதற்காக தமிழ், முஸ்லிம் மக்களை நாம் புறக்கணிக்கமாட்டோம். அவர்களையும் அரவணைத்துக் கொண்டு சிங்கள மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வை நாம் பெற்றுக்கொடுப்போம்.' என்றார்.

(ம-22)

# நால்வருக்கு தண்டம்

துணுக்காய்,ஜன.10

யோகபுரம் மத்தி அனிச்சன்குளம் பகுதியில் நுளம்பு பெருகும் வகையில் சுற்றாடல் வைத்திருந்த நால்வருக்கு துணுக்காய் சுற்றுலா நீதிமன்றில் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

மல்லாவி பொது சுகாதார பரிசோதகர் தினேஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மலேரியா தடுப்பு அலகினருடன் இணைந்து நடத்திய டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனைகளின் போது நுளம்பு உருவாகக்கூடிய வகையில் சுற்றாடலை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுடன் நால்வருக்கு எதிராக சுற்றுலா நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தார்.

வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. குடியிருப்பாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஆயிரத்து 500 ஐநூறு ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

(க-9)

## மரண அறிவித்தல்



### திருமதி சண்முகலிங்கம் லதாமினி

கட்டுவனைப் பிறப்பிடமாகவும். சித்திரவேலாயுதர் கோவிலடி மீசாலை கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் லதாமினி நேற்று **(09.01.2020)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர். சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் மயூரதி (முகாமைத்துவ உதவியாளர் விவசாயத் திணைக்களம்- வவுனியா). இந்துஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆசிரியை). ஞானசேந்தன் (கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சாவகச்சேரி நுணாவில் மத்தி). ஆகியோரின் பாசமிகு தாயாரும் குருபரன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆசிரியர்). திவ்யராஜ் (யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை). டின்சிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி. ஆருத்ரன். ஆரணன். ஆதிரா. ஹர்சவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் பிரபாகரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை). கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(10.01.2020)** வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் **4.00** மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சித்திர வேலாயுதர் கோவிலடி,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

**தொடர்பு: 077 034 2931 (மகன்)**

# நெல் உற்பத்தியாளர்களுக்கு இலவச உரம்

## அரசு பரிசீலனை

கொழும்பு, ஜன. 10

நெல் உற்பத்தியாளர்களுக்கு 2020ஆம் ஆண்டு சிறுபோகம் முதல் இலவசமாக உரம் வழங்குவதற்கு அரசு பரிசீலித்து வருகின்றது.

இதற்கமைய விவசாயி ஒருவருக்கு ஆகக்கூடியது 2 ஹெக்டேயர் நிலப்பரப்புக்கு தேவையான யூரியா, சுப்பர் பொஸ்பேட் (ரி.எஸ்.பி), மியூரியெட் ஒவ் பொட்டாஸ் (எம்.ஓ.பி) ஆகிய உர வகைகள் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன் நாட்டில் தற்போது நிலவும் உரப் பற்றாக்குறை தொடர்பில் பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

'வெளிநாடுகளிலிருந்து உரம் இறக்குமதி செய்வோருக்கு கடந்த அரசு 6 தொடக்கம் 9 பில்லியன் ரூபா நிதியை கொடுக்க தவறியமை காரணமாகவே நாட்டில் திடீரென்று உரப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனினும் பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கமைய திறைசேரி உர இறக்குமதியாளர்களுக்கு 3 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இத்துடன் உரப்பற்றாக்குறைக்கு தீர்வு கிட்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது' என்றும் அமைச்சர் குணவர்தன இதன் போது தெரிவித்தார்.

(ம-24)

# பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 10

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார்.

மானியங்கள் ஆணைக்குழுவில் ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் நிலையில் ஒருவர் தமிழராகவும் மற்றுமொருவர் முஸ்லீமாகவும் நியமிக்கப்படுவது வழமையாகும். இதன் பிரகாரம் தமிழ் அங்கத்தவராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் மருத்துவ பீட விரிவுரையாளருமான வசந்தி அரசரட்ணம் நியமிக்கப்பட்டார்.

இது தொடர்பில் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மேற்படி விடயம் தொலைபேசி மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதோடு விரைவில் நியமனக் கடிதம் அனுப்பி வைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகப் பதிலளித்தார். (ம-105)


## மரண அறிவித்தல்

### மகேஸ்வரன் கஜனி

(யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தரம் 2021 கணிதபிரிவு மாணவி)

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்ட மகேஸ்வரன் கஜனி (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தரம் 2021 கணிதபிரிவு மாணவி) கடந்த **(08.01.2020)** அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மகேஸ்வரன் மற்றும் தவேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் கேதுசனின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் பார்வதி காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(10.01.2020)** வெள்ளிக் கிழமை முற்பகல் **10.30** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர் (077 538 8197)**

## மரண அறிவித்தல்

### திருமதி இராயேஸ்வரி சங்கரப்பிள்ளை

**பிறப்பு - 02.08.1928** **இறப்பு - 09.01.2020**

ஊரெழு மேற்கை பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை இராயேஸ்வரி நேற்று (09.01.2020) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பெரியதம்பி சங்கரப்பிள்ளையின் மனைவியும் ஈஸ்வர மூர்த்தியின் பாசமிகுதாயாரும் விஜயலக்ஷ்மியின் மாமியாரும் விஜயானந்தி, கபிலன், தவக்குமரன், சுலக்சனா ஆகியோரின் பேர்த்தியும் சயிந்தவி, சஷ்வினி ஆகியோரின் பூட்டியும் சரவணபவானந்தம் இந்திராணி காலஞ்சென்ற திலகவதி, பாலசுப்பிரமணியம், அம்பிகை, பகவதி, புனிதவதி ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் ஊரெழு பொக்கனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 929 8324** தகவல்: மகன் குடும்பத்தினர்

## இரண்டாம் வருட நினைவலைகள்

**10.01.2020**

அன்னை மடியில் 16 . 12 . 1967



ஆண்டவன் அடியில் 10 . 01 . 2018

### பேராசிரியர் கலாநிதி
### விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடி

மாதங்களில் சிறந்த மார்கழியில் பிறந்து
மார்கழியில் மறைந்த பேராசிரியனே!
தரணிபோற்றும் தகைசார் அறிஞனே!
தமிழ்த் தேசியத்தை நேசித்தவனே! - மீண்டும்
வருவாயோ? எம் மண்ணுக்கு சேவைகள் பல புரிந்திட

இன்று ஆதிரைநாளில் - உம்
இரண்டாம் வருட நினைவுகள் - வருவது
கண்டு வருந்தியே நின்றோம்
"என் ஆதிரை நாள் எப்போ?" என நீ இறையை வினவி
இயற்றிய கவிதை மெய்யாய்ப் போனதே.

"தியாகத்திறன் வேள்வியாய்" கருக்கொண்டு
உருப்பெற்று எழுந்த கனலுக்கு உண்மையாய் உழைத்தாய்
தன்னலம் கருதாது இராப்பகல் உழைத்து
ஆதிரைநாளில், தாய் மண்ணில் முத்தமிழ் விழா
சிறப்புடன் நடாத்தி வெற்றியும் கண்டாய்.

தியாகத்திறன் வேள்வியும், முத்தமிழ் விழாவும்
ஆதிரைநாளும், கென்னடியின் தினமும் - ஒன்றாய்
இன்று இணைவதை எண்ணி வியப்புடனே
நாம் வருந்தி நின்றோம்.

மெய்யென இருந்த யாவுமே - காலக்
கதியினில், வெளியினில் கரைந்து, புதைந்து
பொய்யெனப் போகும் என்ற தத்துவமே
புகலிடம் ஆகுமே - இது
உன் தாரக மந்திரமாமோ?
விரைந்து வா உலகிற்கு தத்துவம் பேசிட

நீலிப்பந்தனை,
காரைநகர்.

நண்பர்கள், உறவினர்கள்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 10 . 1951



இறப்பு 07 . 01 . 2020

### திருமதி கிருபாதேவி செல்வரட்ணம்

நாரந்தனை வடக்கு றோட்டை பிறப்பிடமாகவும், தையிட்டிப்புலம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் மேற்கு முத்தட்டுமட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாதேவி செல்வரட்ணம் 07.01.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், கஜந்தன் (சுவிஸ்), ஜசிதா ஆகியோரின் பாசமிகு தாயும், அபினா (சுவிஸ்), பிரதீப் (ஜென்றல் எலற்ரிக்) ஆகியோரின் அன்பு மாமியும், மீரா, ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நித்தியானந்தசிவம், சிறிநாதன், காலஞ்சென்றவர்களான தபான், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லலிதாதேவி, காலஞ்சென்ற நடராசா, மற்றும் மகேஸ்வரி, காசிநாதன், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டு மட வீதி,
கோண்டாவில் மேற்கு.

(cs.30487) (13.17)

தகவல்:
குடும்பத்தினர்.

# மின்னொழுக்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப்பொருள்





யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் திருநகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் மின்னொழுக்கால் வீடு ஒன்று முற்றாகச் சேதமடைந்த நிலையில், இந்த இடரால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நேற்று உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.


யாழ்ப்பாணம் பிரதேச செயலக அலுவலர்களால் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் இந்த உதவிப் பொருள்களை வழங்கினார்.

(ம-105)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 16 . 01 . 1950

இறப்பு 06 . 01 . 2020



நீர்வேலி தெற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தில் வசித்த

**நல்லையா பரமேஸ்வரன் (ராசாத்தி)**

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகிறோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**குறிப்பு -**


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2020) வெள்ளிக் கிழமை யாழ் அத்தியடி அம்பலவாணர் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

நீர்வேலி தெற்கு தகவல் : சு.பரமகுரு குடும்பம் (மைத்துனர்)

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 ... 06 ... 1950

இறப்பு 21 ... 12 ... 2019



**Dr. மனோஸ்காந்தன் கார்த்திகேசு**

(ஓய்வு பெற்ற ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியர்)

யாழ் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட மனோஸ்காந்தன் கார்த்திகேசு கடந்த **(21.12.2019)** சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு அழகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான ராஜநாயகம் லஷ்மிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மஞ்சுளாதேவியின் பாசமிகு கணவரும் லக்சன், சுவிற்றி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான மனோரஞ்சன், மனோசாந்தா ஆகியோரின் அன்புத் தம்பியும் இராசசோதி காலஞ்சென்றவர்களான கொங்காதரன், வசந்தாதேவி மற்றும் சாந்ததேவி . பாலகாந்தன், பிறேமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற தண்டாயுதபாணி, சறோஜா காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை **(11.01.2020)** சனிக்கிழமை Emmanuel Church ( Normanton Rd, South Croydon CRY 7AF) இல் நடைபெறும் அதே நாளில் அன்னாரின் நல்லடக்க ஆராதனை காலை 9.30 மணிக்கு ரேன்போ சேச் No.23, 2ஆம் ஒழுங்கை A9 பாதை நுணாவில் இவ்விடத்தில் ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பெறாமகன்
சந்தை வீதி, உடுப்பிட்டி. மனோரஞ்சன் கார்த்தீபன்.

தொடர்பு:-076 347 7635

# மஹிந்தவின் ஆலோசகராக சட்டத்தரணி ஜயந்த

கொழும்பு, ஜன. 10

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆலோசகராக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்சவினால் இதற்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான வீரசிங்க, கொழும்பு சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து 1976ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து சட்டத் தொழிலில் இணைந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 – 04 – 1948

உதிர்வு 22 – 12 – 2018



**அமரர் ஐயாத்துரை குமாரசாமி**

அன்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து ஓராண்டு
கடந்தாலும் உங்கள் அழியாத நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுடன்

கொட்டடி, உடுவில், சுன்னாகம் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**குமாரசாமி சின்னம்மா**



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் அம்பலப்பெருமாள் குளத்தை வசிப்பிடமாகவும் இல. 72 B கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சியில் வசித்தவருமாகிய குமாரசாமி சின்னம்மா நேற்றுமுன்தினம் (08.01.2020) புதன் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், கோசலாதேவி (பிரான்ஸ்), தில்லைநாதன் (பணியாளர் கிளி/ மத்திய ஆரம்ப வித்தியாலயம்), குணரத்தினம் (பிரான்ஸ்), மோகன ராசா ( J.P. தலைவர், கமக்கார அமைப்பு ஐயன்கன் குளம்), சந்திரபாலன் (பிரான்ஸ்), கோகிலலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பத்மநாயகம் (பிரான்ஸ்), வசந்த ராணி (ஆசிரியர் - கிளி / கனகாம்பிகைக்குளம் அ.த.க. பா), கனகாம்பிகை (பிரான்ஸ்), கோசிலதேவி (ஐயங்கன்குளம்), இந்திராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற மகேந்திரராசா ஆகியோரின் பாசமிகு மாமியும், (கிரிஜா, தினேஸ், சயந்தன், கரோஜன், கனோஜன் - பிரான்ஸ்), சஜீபன் (வனஜீவராசி திணைக்களம் - மன்னார்), தக்ஷயா, பதுஷா, (துனுசியா, றதீசன், கீர்த்தனா - பிரான்ஸ்), கிருஸ்ணகோபி, கோபிதாஸ் (உப்பளம் - ஆனையிறவு) நிவேதினி (நீர்ப்பாசனத் திணைக்களம் - மாங்குளம்), டனோஜினி, யோகதாஸ் (கல்வியியற் கல்லூரி - மட்டக்களப்பு), மிதுனகோபி, (கிறோஜனா, சவுர்தா, சுலக்சனா, கௌசிகா, மனோஜா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், (றிவேஸ்கா, அஸ்விகா, அஷ்வித் - சுவிஸ்), ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.01.2020) ஞாயிற்றுக் கிழமை இல. 72 B கனகம்பிகைக்குளம், கிளிநொச்சியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோட்டைகட்டியகுளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

077 418 0035, 077 148 5201 (c23037)

## GCE O/L ICT

Grade 10 / GCE O/L ICT பாடம் வீடுவந்து கற்பிக்கப்படும்.

T.P 077 476 6597

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் புகையிரத நிலைய வீதிக்கு முன்பாக குட்செட் வீதியில் அமைந்துள்ள வீடொன்று வாடகைக்கு உண்டு.

077 330 1233

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்திற்கும் கோண்டாவிலுக்கும் இடையில் 08.01.2020 புதன்கிழமை இன்சூரன்ஸ். ரக்ஸ். ATM Card. சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவற விடப்பட்டுள்ளன. சன்மானம் வழங்கப்படும்.

076 857 7043, 076 447 4098

## வீடு வாடகைக்கு

நல்லூர் சங்கிலியன் வீதியில் சகல வசதிகளுடனும் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

071 220 8808, 077 129 9307

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1985 இல் பிறந்த பூர நட்சத்திரம் (5' 4" உயரம்) MBBS தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

075 096 4077

(CS 304680)04.17)

## காணி விற்பனைக்கு

சரசாலை, தெற்கு. கமலாசனி வீதி. 2ஆம் ஒழுங்கையில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
076 555 0699

## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத் திற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
078 746 5669, 077 281 5616

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
# பொது அறிவித்தல் - 2020

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/ தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந் நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் 2020**

இப்பிரதேச நிர்வாக எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் உரிய விண்ணப்ப படிவத்தினை உரிய உப அலுவலகங்களில் பெற்று 31.03.2020 ற்கு முன்னர் 2020 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும். 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**02. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் 2020**

1533/16 ஆம் இலக்க 25.01.2008ம் மற்றும் 1534/18ம் இலக்க 01.02.2008 திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப் பட்ட தற்கமைய தொழில் அல்லது வியாபாரத்தை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் தினை உரிய உப அலுவலகத்தினூடாக கட்டாயமாக பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

**03. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்.**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள், குழாய் கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்றீட் வேலைகளுக்கும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அனுமதி யின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாயினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதப்பட்டு சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும். மேலும் கட்டடம் அமைக்கப்படும் காணியின் 1/3 பகுதி கட்டாயமாக நிலப்பகுதியாக அமைதல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக் கொள்ளல் 2020**

2020 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி உரிமம், மிருகவரி(வளர்ப்பு நாய்கள்) உரிமங்களை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**05. விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல்.**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளில் இரு மருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேசசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினை செலுத்தி அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாத வர்த்தக நிலைய நிறுவனங்களின் விளம்பரங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

**06. மரக்கறி,மீன், இறைச்சிவகை விற்பனை தடைசெய்தல்**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 01 Km தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள், பாதை யோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**07. படவரைஞர் பதிவுசெய்தல் /புதுப்பித்தல்**

2020 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே படவரைஞராக பதிவு செய்தவர்களும் 31.03.2020 திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக் கொள்ளமுடியும்.

**08. பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09. கழிவகற்றல் சேவை**

தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி சபையின் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றிக் கொள்ளமுடியும். மேலும் கழிவுப் பொருட்களில் பிளாஸ்டிக் ,கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்ற வற்றினை வேறுபடுத்தி பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட இடத்தில் இடப்படவேண்டும். உக்கும் கழிவுகளை தாங்களாகவே அகற்றிக் கொள்ளல் வேண்டும்.

**10. நீர் வழங்கல் சேவை**

பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளுக்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**11. கனரக வாகன சேவைகள்**

பக்கோ, கலிபவுசர், றோலர் போன்ற கனரகவாகன சேவைகள் பெறுவதற்கு, சபையில் சேவைக்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**12.பொது சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமை யாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொது சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். டெங்கு பரவக் கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும்.

**13.சந்தை வியாபாரம் தொடர்பானது**

சந்தையில் உற்பத்தி பொருட்களுக்காக எதுவிதகழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகைவரியானது 4% ற்கு மேற்படலாகாது. சந்தைச் சுற்றாடல் பகுதியில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நிறுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

**14.பொது வழியின் பயன்பாட்டை இடையூறு செய்யும் வகையில் அலைந்து திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்தல்.**

பொது வழி மீது அல்லது பொதுவழியின் அருகில் கால்நடைகளை கட்டுதல், அலைந்து திரிகின்றவகையில் கால்நடைகளை விடுதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான குற்றங்களுக்காக பிடிக்கப்படும் கால்நடை களை பிடித்தல், பராமரித்தல் செலவுகளுக்காக சபையால் காலத்துக்குகாலம் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களை செலுத்ததவறின் அல்லது கால்நடைகளை உரிமை கோராதுவிடின் அவ்வாறான கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**15. டெங்கு நோயைக் கட்டப்படுத்தல்**

எமது பிரதேசத்தில் ஆட்கொல்லி நோயான டெங்குநோய் பரவுதலைக் கட்டுப்படுத்தும் ஓர் அங்கமாக சபையின் எல்லைக்-குட்பட்ட ஆதனங்களை துப்பரவாக வைத்திருக்குமாறு அதன் உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். இதனை மீறும் ஆதனங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**16.ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்**

எமது சபையால் மேற்கொள்ளப்படும் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. பதிவு செய்யவிரும்பும் ஒப்பந்தகாரர்கள் ரூபா 2 மில்லியன் தொகைக்கு உட்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் ரூபா 2 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் எதிர்வரும் 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**17.பொலித்தீன் பாவனையை தடைசெய்தல்**

2034/33 ஆம் இலக்க 2017.09.01 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே உணவுப் -பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் நடைவண்டி மூலம் உணவு விற்பனையில் ஈடுபடுபவர்கள் மேற்படி வர்த்தமானி அறிவுறுத்தலை பின்பற்றுதல் வேண்டும்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **தங்கமலர் சிவசுந்தரராசா**



மலர்வு 17.11.1957
உதிர்வு 23.12.2018

**திதி: திருவாதிரை (10.01.2020)**


ஆண்டொன்று ஆனதுவோ! ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
மாறாத உம் நினைவால்
மனம் வெம்பி அழுகின்றோம்
என்றும் எம் உள்ளங்களில்
குடியிருக்கும் அன்புத் தெய்வமே
ஐயனார் அடியில் சாந்தி பெறுங்கள்

சந்தம் புளியடி,
காரைநகர்.

வேலுப்பிள்ளை
சிவசுந்தரராசா (கணவர்)
குடும்பத்தினர்.

(cs.30504) (13.17)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.12.2019 சனிக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் மயில்வாகனம் மகாலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (11.01.2020) சனிக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையி லும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 12. 01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கதிரமலை வீதி,
இலங்கை வங்கி முன் ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு.

(CS.117113) (13.17)

குடும்பத்தினர்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.06.1946
மறைவு 20.12.2010

**அமரர் பஞ்சலிங்கம் செல்வராஜா**

(முன்னாள் சாரதி, DI, இ.போ.ச)

**திதி: பூரணை**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்பது மறைந்தாலும்
என்றும் எம் உள்ளங்களில் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மில்லேன்,
ஏழாலை மேற்கு.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

ஈ.பி.டி.பியின் கோரிக்கைக்கு எதிராக

# முன்னணி, கூட்டமைப்பு இணைந்து போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிலையியல் குழுவில் இணைவதற்கு பாதீட்டில் வட்டாரங்களுக்கு ஒதுக்கிய நிதியினை உறுப்பினர்களுக்குச் சமனாகப் பங்கிட வேண்டும் என்று ஈ.பி.டி.பி முன்வைத்த கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முன்னணி இணைந்து நிராகரித்தன.

ஈ.பீ.டி.பியின் கோரிக்கையினை கூட்டமைப்பு ஏற்க மறுத்த நிலையில், மக்கள் அபிவிருத்திக்கான சபை, நிதியை மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாகுபாடு இன்றி ஒதுக்கக்கோரியும் அதனை ஏற்க மறுப்பதனால் நாம் சபையில் இருந்து வெளியேறுகின்றோம் என உறுப்பினர் ரெமிடியஸ் தெரிவித்து வெளியேற ஈ.பி.டி.பியின் சகல உறுப்பினர்களும் வெளியேறினர்.

தொடர்ந்து இலங்கை சுதந்திரக் கட்சியின் இரு உறுப்பினர்களும் வெளியேறினர்.

இதையடுத்து மாநகர சபையின் 45 உறுப்பினர்களில் 32 உறுப்பினர்களுடன் சபை இயங்கியது. கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐ.தே.கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கி குழுக்கள் தேர்வு இடம் பெற்றது. (ம-105)




பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு க.பொ.த.சாதாரண தர பரீட்சையின் பின் வணிகத்துறையில் சிறந்த எதிர்காலத்தினை அமைத்திட...

**க.பொ.த (உயர்தர) மற்றும் aat வகுப்புக்கள் ஒரே தடவையில்**

G.C.E (A/L) உடன் AAT சமாந்திரமாக கற்பதன் அனுகூலங்கள்....

1. மிகச்சிறந்த G.C.E (A/L) பெறுபேறுகள்
2. பரீட்சையின் முடிவில் கல்வி தராதரத்துடன் AAT தொழில்கள் தராதரம்
3. CA, CIMA, ACCA, CMA கற்கை நெறிகளுக்கு AAT மூலம் விலக்களிப்பு
4. குறைந்த வயதில் வேலைவாய்ப்பு

**G.C.E (A/L) 2022**
Tamil Medium
தமிழ் ஆங்கில மொழிமூலம்

**ACCOUNTS -** T.Nishanthan (BCom. Acc. Sp.)
**ECONOMICS -** P.Thayaparan (BCom. Acc. Sp)
**BUSINESS STUDIES -** T.Logesh (HNDA)

aat தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்
AAT3 ↑ AAT 2 ↑ AAT 1

aat SRI LANKA
தொழில்சார் கற்கைநெறி
க.பொ.த சாதாரணதரம்

வகுப்புக்கள் ஆரம்பம் 11.01.2020

வகுப்புக்கள் ஆரம்பம்
1ம் பிரிவு 11.01.2020 காலை 9.00
2ம் பிரிவு 13.01.2020 மாலை 3.30

✔ எமது நிறுவன A/L மாணவர்களுக்கு AAT முதலாவது பிரிவு வகுப்புக் கட்டணம் முற்றிலும் இலவசம்.
✔ பெப்ரவரி 12ம் திகதிக்கு முன் பதிவு செய்பவர்களுக்கு 15% கழிவு AAT நிறுவனத்தால் வழங்கப்படும்.

IBM
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
Quality Learning for Quality Life
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
No.1, 2nd Lane, Power House Road, Jaffna.
TEL: 0777 071 601
0777 633 915






# பல்தேசிய கம்பனிகளும் தமிழ்ச் சமூகமும்

> நாகரிக வளர்ச்சி, அபிவிருத்தி என்று வந்தாலும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு இன்று மற்றவர்களிடம் எதையோ ஒன்றை எதிர்பார்க்கும் நிலையைத் தான் ஏற்படுத்தியுள்ளது.

இ.ஜஸ்லின் தக்சான்
ஊடக கற்கைகள்
யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கையில் நடைபெற்ற போரானது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயம். குறிப்பாக வட பகுதி மக்கள் உயிர்கள், உடைமைகள் என அனைத்தையும் இழந்து இன்று பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர். போர் முடிவுக்குக் கொண்டு வந்த பின்னரும் மக்களின் பொருளாதாரம் இன்று பெரும் பிரச்சினையாகவே இருக்கின்றது. இதற்கு ஏற்றால் போல் நாளாந்த விலையேற்றங்கள் எல்லாம் மக்கள் மீது சுமைகளை ஏற்றுவதாகவே இருக்கின்றன.

## எதிர்பார்க்கும் நிலைமை

நாகரிக வளர்ச்சி, அபிவிருத்தி என்று வந்தாலும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு இன்று மற்றவர்களிடம் எதையோ ஒன்றை எதிர்பார்க்கும் நிலையைத் தான் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கில் சிறந்த முதலீடுகளைச் செய்யலாம் என்ற நோக்கத்துடன் போருக்குப் பின்னரான காலத்தில் பல நிதி நிறுவனங்கள் படையெடுக்க ஆரம்பித்துவிட்டன. தற்போதைய உலகமயமாக்கல் செயற்பாடானது தனியார்களுக்கான செல்வக் குவிப்பையே தீவிரப்படுத்தியுள்ளது. அந்த வகையில் இன்றைய தமிழ்ச் சமூகத்தில் அதிகம் பேசும் பொருளாகக் காணப்படுவது பல்தேசிய கம்பனிகள் ஆகும். நாம் அறிந்தோ அறியாமலோ இவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகின்றோம். நமது அன்றாடச் செயற்பாடுகளின் மூலம் இவற்றை ஊக்குவிக்கின்றோம். தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம், கல்வி, வங்கித்தொழில் என்ற பெரும் வளர்ச்சிக்குப் பல்தேசிய கம்பனிகளின் பங்களிப்பே காரணம் என்று ஒரு மாயையை உருவாக்கிவிடுகின்றோம். எனவே இதனைக் கட்டவிழ்த்துப் பார்க்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.




## நிதி நிறுவனங்களும் நெருக்கீடுகளும்

தமிழ்ச்சமூகத்திலேநிதிநிறுவனங்கள் பெருமளவான வர்த்தகர்களையும் பெண்களையும், மையமாகக் கொண்டு இங்கு வந்து வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன என்றுதான் சொல்ல வேண்டும். இதனால் தான் தற்போது நுண்கடன் என்ற சுமையால் பல தற்கொலைகள் எமது சமூகத்தில் அண்மைக்காலமாக இடம் பெறுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இதுவரை காலமும் இல்லாத பிரச்சினைகள் பல்தேசிய கம்பனிகளின் வருகை மூலம் விஸ்தரிக்கப்படுவதை அவதானிக்க முடியும். பல்தேசியக்கம்பனி என்பது ஒரு நாட்டின்தலைமையகத்தைக் கொண்டு ஏனைய நாடுகளில்தமது கிளைகளைப் பரப்பி வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ள கம்பனிகளே ஆகும். இவைகளில் பல்வேறுபட்ட கம்பனிகள் காணப்படுகின்றன. உதாரணமாக வர்த்தகம் வங்கி, காப்புறுதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மக்கள் ஒரு பொருளைக் கொள்வனவு செய்வதற்கு வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற காலம் போய் இன்று பொருள்கள் வீடு தேடிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. இது அபிவிருத்தியின் மாற்றமா அல்லது கொள்கை அற்ற பொருளாதாரமா என எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறான நிறுவனங்கள் எமது பொருளாதாரத்தைச் சுரண்டி வெளிநாடுகளுக்கும் தென் பிரதேசங்களுக்கும் கொண்டு செல்வதே நோக்கமாகக் கொண்டுள்ளன. 'எங்கள் பணம் எங்களுக்கே' என்ற எண்ணப்பாட்டை நாங்கள் உணர வேண்டும்.

## அபிவிருத்தி

30 வருட காலப் போரால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற மக்களுக்கு அபிவிருத்தி என்ற மாயை மூலம் இவ்வாறான கம்பனிகள் படையெடுத்துத் தமது கிளைகளை விஸ்தரிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் 'இணைய வங்கிகள் மற்றும் பல நிதி நிறுவனங்கள் தற்போது இயங்குகின்றன. முதலாளித்துவ நாடுகள் மேற்கொள்ளும் அபிவிருத்தி அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கும் நாடுகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படுவதில்லை. இதனால் எமது உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிப்படைகின்றனர். அதாவது உள்ளூர் உற்பத்திக்கான கேள்வி குறைவடைந்து பொருளாதார ரீதியில் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மேலைத்தேய பண்பாடு பரவியதால் எமது பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் விழுமியங்கள் பாதிப்படைகின்றன. பாரம்பரியத்துக்கும் நவீனத்துக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றமையால் சமூக உறவு முறைகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது. அத்துடன் பல்தேசியக் கம்பனிகளைப் பயன்படுத்தும் சமூகமானது தம்மை ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துக் கொள்ள விரும்புவதால் சமூகத்திலே வகுப்பு வேறுபாடு தோன்றுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் பணவீக்கம் இடம்பெறவும் அடிப்படைக் காரணிகளாக இப்பல்தேசிய கம்பனிகளின் இருப்பு உள்ளது. வெளிநாட்டில் இருந்து விடுமுறைக்காக வருபவர்களுக்கும் இங்கு ஆடம்பர வாழ்வு வாழ்பவர்களுக்கும் இவ்வாறான பல்தேசிய நிறுவனங்கள் ஏற்றதாக இருந்தாலும், இவை அனைத்தும் எமது பொருளாதாரத்தைச் சுரண்டுவதாகவே அமைப் போகின்றன.

## பொருளாதாரப் பாதிப்பு

இவ்வாறான நிறுவனங்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் அவை எம் மக்களின் பொருளாதாரத்தைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்பதே எமது அபிலாசையாகும். இவ்வாறு பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் காரணமாக 'ஜோர்ஜ் நிஸ்வர்' என்பவர் உலகமயமாக்குதலைப் போன்று மைக்டொனால் மயமாக்கம் என்ற கொள்கையை தோற்றுவித்தார்.

இதன் மூலம் பல்தேசியக் கம்பனியைத் தோற்றுவித்தார். இதன் மூலம் பல்தேசிய கம்பனி பல நாடுகளில் தோற்றம் பெற்றதால் அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது எனக் குறிப்பிடுகின்றார். ஆகவே பல்தேசியக் கம்பனிகளை எமது தமிழ்ச் சமூகத்தின் கட்டமைப்பிலே பல மாற்றங்களையும் பண்பாட்டுக் கலா சாரத்திலே மேலைத்தேய ஊடுருவலையும் ஏற்படுத்தி எமது ஒழுங்கிலே பல மாறுதல்கள் நவீன உலகத்துக்கு உட்பட்டுக் காணப்படுகின்றமையால் பல்தேசிய கம்பனிகளின் செல்வாக்கின் தன்மையை நாம் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். இதனால் பீசா பர்கர் என்று நாகரிகம் மாறினாலும் குரக்கன் பிட்டும் மரவள்ளிகிழங்கும் சம்பலும் போன்ற எமது வழமையான உணவுகளுக்கு இவை என்றைக்கும் ஈடாக மாட்டாது என்பது வெளிப்படையான உண்மை. ■

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வளைகுடாவுக்குப் பக்கத்திலா வடக்கு ?

வடக்கு நேற்று முன் தினம் இரவில் இருந்தே ஒருவித போர்ச்சூழலுக்குள் புகுந்துவிட்டது போல மாறியிருக்கிறது. அந்த மாற்றம் நேற்று இன்னும் வீரியமடைந்தது. நேற்று வீதியால் சென்றீர்களானால், அகதிமுகாமில் நிவாரணத்துக்காக முண்டியடிப்பவர்களைப் போல நீண்ட வரிசையில் காத்திருப்போரைக் கண்டிருக்கலாம்; இன்றும் கூடக் காண முடியும். முதலில் யாழ்.நகரத் தெருக்களில் மட்டுமே இந்த வரிசைகள் முளைத்தன. அதனால் யாரும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. போகப் போக வடக்கின் பல பகுதிகளிலும் அனுமர் வால் போல வரிசையின் நீளமும், அகலமும் அதிகரித்து தள்ளுமுள்ளு வரை சென்ற போது தான், ஏதோ ஒரு இயல்புநிலை குழம்பியிருப்பது புலனாகியது. அப்போதும் 'ரஜினியின்தர்பார்படத்துக்காக இப்படி வெறித்தனமாக வரிசைகட்டுகிறார்களே' என்று கடந்து போனவர்களும் உண்டு.

ஆனால் அந்த நீண்ட வரிசைகளிலான காத்திருப்பும், முண்டியடிப்பும் பெற்றோலுக்கானது என்பதை அறிந்தவர்கள், அடுத்த நொடியே தாமும் கையில் கிடைத்த கொள்கலன்களுடன் அந்த வரிசைகளில் தம்மையும் ஐக்கியமாக்கிக் கொண்டார்கள். ஏன் இப்படி வரிசை? பெற்றோலுக்கு அப்படியென்ன தட்டுப்பாடு வந்துவிட்டது ? பெற்றோலை இப்படி மேலதிகமாக வாங்கி இருப்பில் வைக்க வேண்டிய அவசியம் உண்டா? என்பது பற்றியெல்லாம் அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. ஊரோடு ஒத்தோடி, தாமும் பூகோள அரசியலைக் கணித்து நடப்பதில் வல்லவர்கள் என நெஞ்சை நிமிர்த்துவதில் அப்படி ஒரு அலாதிப்பிரியம்.

முன்னெச்சரிக்கை என்பது ஒவ்வொருவருக்கும் கட்டாயம் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அதுவே எல்லைமீறிப் போய்விட்டன, அவர்களுக்கு மட்டுமல்லாது, ஏனையவர்களுக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தி விடும். தேவையான வற்றையெல்லாம் கோட்டைவிட்டுவிட்டு, முந்திரிக்கொட்டைத்தனமாக, தேவையற்ற விடயங்களைத் தூக்கிப் பிடித்து ஊதிப்பெருப்பித்து அதையேதலையாய பிரச்சினையாக உருமாற்றுவதில் தமிழர்களை அடித்துக்கொள்ள ஆளே கிடையாது.

வெறும்வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு இப்போது கிடைத்துள்ள அவல், வளைகுடாப் பதற்றம். ஏவுகணைகளால் மோதிக்கொண்ட, அமெரிக்காவும், ஈரானும் கூட, இப்போது சண்டை பிடித்ததையே மறந்துவிட்டு தத்தம் வேலைகளைப் பார்க்கப் போய்விட்டார்கள். ஆனால் நம்மவர்களோ, வளைகுடாவில் வெடித்த ஏவுகணையின் சிதறல்கள் ஏதோ வடக்கின் பெற்றோல் பவுசர்களைப் பதம் பார்க்கப்போகின்றது என்ற அளவுக்கு,ஒரு செயற்கைப் பதற்றத்தையும் , அதனூடாக பெற்றோலுக்குச் செயற்கைத் தட்டுப்பா ட்டை உருவாக்குவதில் வெற்றியும் கண்டுள்ளார்கள். இப்படி ஆளையும் எழுப்பி, முயலையும்எழுப்பிவிடும்கெட்டித்தனத்தால், தேவையற்ற பதற்றமும், நேரவிரயமும்தான் ஏற்படுமே தவிர வேறெதுவும் நிகழப்போவதில்லை. தென்னிலங்கையில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு என்ற எந்தவிதமான அசுமாத்தமும் தென்படாத சூழலில், வடக்கு மட்டும் வளைகுடாவுக்குப் பக்கத்தில் இருப்பது போல பாவ்லா காட்டி, பெற்றோலுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குவது ஒருபோதும் ஏற்கக் கூடியதல்ல. செம்மறியாட்டுக் கூட்டமாக யாரோ சிலர் நம்மை 'உசார் மடையர்களாக' மாற்ற நினைக்கும் தந்திரத்துக்குப் பலியாகாமல் இருப்பதன் மூலமே இனிவரும் காலங்களிலும், இத்தகைய செயற்கைத்தட்டுப்பாடுகளை முளையிலே கிள்ளியெறிய முடியும். ஒரு துளி பெற்றோல் கூட இல்லாமல், தனி மண்ணெண்ணெயிலே மோட்டார் சைக்கிளை ஓடிக்காட்டி, அரபுக்காரர்களையே அடிவயிறு கலங்கச்செய்த இனம், இப்போது அரபு நாட்டில் ஏதோ ஒன்று நடந்தமைக்கு அலறித் துடித்து இப்படி வரிசை கட்டுவது அபத்தத்திலும் அபத்தம்

## வடக்கிலிருந்து

# பொலிஸுக்கு 2 ஆயிரம் பேர்

கொழும்பு. ஜன. 10

வடக்கு மாகாணத்திலிருந்து 2 ஆயிரம் பேரை பொலிஸில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தை வடக்கு மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தும்செயல்திட்டத்தின் ஓர்அங்கமாகவே இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதன்படி உப பொலிஸ் அதிகாரி (எஸ்ஐ) 200 பேரும், பொலிஸ்கொன்ஸ்டபிள்பதவிக்குஆயிரத்து 400 பேரும், பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள்பதவிக்கு 400பேரும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இவ்வாறு உரிய நடைமுறைகளுக்கமைய இணைத்துக்கொள்ளப்படவுள்ள புதியபொலிஸ்அதிகாரிகள், வடக்கு மாகாணத்திலுள்ள பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்பட்ட பின்னர், சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (ஒ.5.44)

## புலிகளின் புதையல்தேடி முல்லைத்தீவில் அகழ்வு!

முல்லைத்தீவு. ஜன.10

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கில் விடுதலைப் புலிகளால் பொருள்கள் புதைத்து வைக்கப்பட்டன என்று நம்பப்படும் இடம் ஒன்றில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீதிமன்ற அனுமதி பெற்று அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும் தடங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறப்படு கின்றது. முள்ளிவாய்க்கால் கிழக்கில் உள்ள குடும்ப நல உத்தியோகத்தர் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்திலேயே அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவுப்பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், பிரதேச சபைத் தவிசாளர், தொல்பொருள்திணைக்கள உத்தியோகத்தர்கள், படையினர் முன்னிலையில்அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-ரி3)





## கோத்தாவின் திடீர் 'விசிட்'

கொழும்பு ஜன. 10

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு நேற்றுத் திடீர் கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

நேற்றுக் காலை சென்று வெளிநோயாளர் பிரிவைப் பார்வையிட்ட அவர், மருத்துவர்களைச் சந்தித்து மக்களின் நலன்கள் குறித்துக் கேட்டறிந்தார்.

மக்களைச் சந்தித்து மக்களின் நலன்கள், தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மருத்துவமனையின் நடவடிக்கைகள், நிர்மாணப் பணிகள்குறித்தும்ஜனாதிபதிஇதன்போதுகேள்விஎழுப்பினார்.

கோத்தாபயஆட்சிக்குவந்ததன்பின்னர்விசேடபொருளாதார மையம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் உள்ளிட்ட பல இடங்களுக்கு இவ்வாறு திடீர் கண்காணிப்புப் பயணங்களைமேற்கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# நற்பெயரைப் பயன்படுத்தி கடன்பெறும்முறைஅறிமுகம்!

கொழும்பு ஜன. 10

கடன் வழங்கும் நபர்கள் தொடர்பில் விசேட மதிப்பீட்டுப் பிரிவொன்றை நேற்று முதல் அறிமுகப்படுத்துவதாக இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் தெரிவித்துள்ளது. அதன்படி, கடன் பெறும் நபர்களுக்கு மதிப்பெண் வழங்கப்படவுள்ள நிலையில் அதனூடாக எளிதாகக் கடன் பெறமுடியும்என்று அந்தப்பணியகத்தின்பொது மேலாளர்நந்திமித்ரஅந்தோனிதெரிவித்துள்ளார்.

அதன்படி, தனி நபர்களின் நற்பெயரை கடன் பெறும்போதுபாதுகாப்பாகமுன்வைக்கசந்தர்ப்பம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இந்தக் கடன் மதிப்பெண் முதன்முறையாக நேற்று அறிமுகப்படுத்தப்படும் நிலையில், இது வளர்ச்சியடைந்தநாடுகளில்கடன்சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் கடன் இடர் மேலாண்மைக்காக பயன்படுத்தப்படும் உயர் நிதி முறைமையாகும் என்று தெரிவித்தார். இந்தக் கடன் மதிப்பெண் பணியகத்திடமுள்ள கடன் பெறுநர் தகவல்களைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது என்று தெரிவித்தார். (ஒ.5)

# வரலாற்றுத் துரோகம்

சேரலாதன்

தேசிய கீதத்தைத் தமிழில் இசைப்பது தவறல்ல எனவும், தமிழர்கள் அதைத் தமிழில் இசைப்பதே பொருத்தமானது எனவும் அரசியல் துறைப் பேராசிரியரும், பிரபல அரசியல் விமர்சகருமான நிஹால் ஜயவிக்கிரம கூறியுள்ளமை இந்தக் கால கட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அவர் தமது கருத்தை பிரபல வாராந்த சிங்கள ஊடகமொன்றில் தெரிவித்துள்ளார். தமிழர்கள் தமிழில் தேசியகீதம் பாடுவது அரசமைப்புக்கு விரோதமானதல்லவெனவும் அவர் கூறியமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இனவாதத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இனங்களுக்கிடையில் விரோதத்தையும், பகைமையையும் வளர்த்துக் கொண்டிருக்கும் இனவாத அரசியல்வாதிகள் பேராசிரியர் நிஹால் ஜயவிக்கிரமவின் கருத்துக்களை ஒரு கணமாவது மனதில் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

**தடைவிதிப்பு**

சிங்கள மொழியில் இயற்றப்பட்ட தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பையே தமிழர்கள் இசைக்கின்றனர். மேலும் இசையிலும் வேறுபாடு எதையும் தாணமுடியவில்லை. இதைவிட இலங்கைத் தாயை மனமுருகியவாறு போற்றிப் புகழ்ந்து தமிழில் தேசிய கீதத்தைத் தமிழர்கள் இசைக்கின்றனர். எந்த இனத்தைச் சார்ந்தவர்களும் தமது தாய் மொழியில் செயற்படுவதையே அதிகம் விரும்புவார்கள். தேசிய கீதத்தை இசைப்பதிலும் இதற்கு விதிவிலக்குக் கிடையாது. இந்த நிலையில் தமிழில் தேசிய கீதத்தை இசைக்கக் கூடாதெனத் தடைவிதிப்பது தமிழர்கள் இலங்கைத் தாயின் புதல்வர்கள் என்பதற்குத் தடை போடுவதாகவே அமைந்துவிடும். இந்த நாட்டின் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள பற்றுக்கும் முட்டுக்கட்டை இடுவதாகவே இது அமைந்துவிடும். ஆட்சியாளர்கள் சிறுபான்மையின மக்கள் இந்த நாட்டின் குடி மக்கள் எல்லர் என நினைப்பதாகத் தெரிகின்றது. இது இந்த நாட்டின் ஐக்கியத்துக்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கும் முற்று முழுதாகவே வேட்டு வைத்துவிடும். ஆட்சியாளர்கள் இனிமேலாவது நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகொண்டு மாற்று நடவடிக்கை எடுப்பதற்குத் துணிய வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் இதற்கு முன்வருவார்களா?

**13 ஆவது அரசமைப்புத் திருத்தம்**

அரசின் செயற்பாடுகளைப் பார்த்தால் தமிழர்கள் எந்த விதமான சலுகையையும் தற்போதைய அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாதென்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவானதே 13 ஆவது அரசமைப்புத் திருத்தமாகும். இதன் பிரகாரமே மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. தமிழர்களின் பாரம்பரியமான பிரதேசங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் மாகாண அரசுகளுக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். ஆனால் அவை வழங்கப்படாத நிலையே இன்றளவும் காணப்படுகின்றது.

மேலும் அதிகாரங்கள் வழங்கப்படாத மாகாணசபைகள் எதையுமே சாதிக்க முடியாத வக்கற்ற நிலையில் காணப்பட்டு மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கின்றன. ஜனாதிபதியின் அறிவிப்பு இவ்வாறானதொரு நிலை தொடருமென்பதையே எடுத்துக் காட்டிவிட்டது. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ள மாகாண அரசுக்குப் பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட சில அதிகாரங்கள் வழங்குகின்ற ஏற்பாடுகள் நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்பதால் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாதென அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார். இதற்கு மேலும் அதிகாரப் பகிர்வு கிடைக்குமெனத் தமிழர்கள் காத்திருப்பதில் அர்த்தமே கிடையாது.



**ஒப்பந்தம்**

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரதான பங்காளியான இந்தியா அதை நடைமுறைப்படுத்துவதில் பிரதான பங்கை வகித்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதென கோத்தபாய இந்தியாவில் வைத்துக் கூறியபோது, இந்தியா அதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. கோத்தபாயவைத் தட்டிக் கேட்பதற்குரிய திராணியை இந்தியா கொண்டிருக்கவில்லை. ஒன்றாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டபோது கூட இந்தியா வாயைத் திறக்கவில்லை. ஒரு பலவீனமான ஒப்பந்தத்தை இந்தியாவும், இலங்கையும் கைச்சாத்திட்டுவிட்டு தமிழர்களுக்கு எல்லாவற்றையும் வழங்கிவிட்டதாகக் கூறியமை ஓர் ஏமாற்று வேலை என்பதை இது நிரூபணமாக்கியுள்ளது. ஆகவே தமிழர்கள் இனியும் இந்தியாவை நம்புவதால் பயனில்லை. தமிழ்த் தலைமைகள் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்கள் மேலும் மேலும் புறக்கணிக்கப்படுவதும், ஏமாற்றப்படுவதும் தொடரப் போகின்றதா? என்ற ஐயம் உறுதியாகிப் போவது தெளிவாகத் தெரிகின்றது.


> “சிங்கள மொழியில் இயற்றப்பட்ட தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பையே தமிழர்கள் இசைக்கின்றனர். மேலும் இசையிலும் வேறுபாடு எதையும் காணமுடியவில்லை. இதைவிட இலங்கைத் தாயை மனமுருகியவாறு போற்றிப் புகழ்ந்து தமிழில் தேசிய கீதத்தைத் தமிழர்கள் இசைக்கின்றனர். எந்த இனத்தைச் சார்ந்தவர்களும் தமது தாய் மொழியில் செயற்படுவதையே அதிகம் விரும்புவார்கள்.”

**ஜனநாயகக் கடமை**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தமது ஜனநாயகக் கடமையைத் தெளிவாக நிறைவேற்றியுள்ளனர். கோத்தபாயவை விடுத்து சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தமை ஒரு தவறான விடயமல்ல. தமக்கு விரும்பியவருக்கு வாக்களிப்பது அவர்களின் உரிமையாகும். இதற்காக அவர்களைப் பழிவாங்க நினைப்பது ஒரு வரலாற்றுத் தவறாகும். இதைத்தான் இலங்கையின் ஆட்சியாளர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எந்தவொரு விளைவுக்கும் எதிர் விளைவு உள்ளது என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டதொரு உண்மையாகும். இது அரசியலுக்கும் பொருந்தும். தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு என்றோ ஒரு நாள் நீதி கிடைத்தே தீரும். இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு அன்றைய தமிழ்த்,தலைவர்களும் பாடுபட்டு உழைத்துள்ளனர். அவர்கள் விரும்பியிருந்தால் ஆங்கிலேயரிடம் தமிழர்களுக்கென ஒரு தனி நாட்டைக் கேட்டுப் பெற்றிருக்க முடியும். ஆனால் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழவே அவர்கள் விரும்பினார்கள். இந்தப் பெருந்தன்மையைச் சிங்களத் தலைவர்கள் உணராமல் போனமை துரதிருஷ்டவசமா னது. அது மட்டுமல்லாது அன்றைய தமிழ்த் தலைவர்கள் விட்ட பெரும் தவறின் பலன்களை இன்றுள்ள தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் சுதந்திரதின நிகழ்வில் தமது மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதற்குக் கூட அவர்களால் முடியவில்லை. இதைவிட மிகப் பெரிய துரோகம் வேறெதுவும் இருக்க முடியாது.

# வாள்களுடன் கும்பல் துரத்தியதால் பதற்றம்



கொடிகாமம், ஜன.10

கொடிகாமம், பாலாவிப் பகுதியில் வாள்களுடன் கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டதால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் தனது பிள்ளையை ஏற்றிச் செல்ல ஒருவர் சென்றுள்ளார். அவரை வாள்களுடன் கும்பல் ஒன்று துரத்தியுள்ளது. அவர் அங்குள்ள வீடொன்றுக்குள் நுழைந்து ஒளிந்து கொண்டதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கும், உறவினர்களுக்கும் தெரியப்படுத்தினார்.

வாள்களுடன் வந்த கும்பல் அந்த வீட்டின் வேலி மற்றும் கதவுகளைச் சேதப்படுத்தி அட்டகாசம் புரிந்தது. இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டு மக்கள் திரளத் தொடங்க அந்தக் கும்பல் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர். அச்சுறுத்தப்பட்டவரையும், அவரது பிள்ளையையும் பாதுகாப்பாக வீட்டில் சேர்ப்பித்தனர்.

அச்சுறுத்தப்பட்டவரின் உறவினர் கடந்த ஆண்டு கூரிய ஆயுதம் ஒன்றால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டிலேயே இவர் கொலை செய்யப்பட்டார்.

அவரது பிள்ளைகளும் நேற்று முன்தினம் மாலை குழு ஒன்றால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தபோது வாள்களுடன் வந்த குழு ஒன்று அச்சுறுத்தியது என்றும், அவர்கள் தப்பியோடி ஒளிந்து கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது. கடந்த ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட தரப்பினரே அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-159)

# ஏற்ற மறுக்கின்றன நெடுந்தூர பஸ்கள்!

## ஆசிரியர்கள், மாணவர்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஜன.10

ஏ/9 வீதியில் பயணிக்கும் நெடுந்தூர பயணிகள் பஸ்கள் தங்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்க்கின்றன என்று தென்மராட்சிப் பிரதேச ஆசிரியர்களும், மாணவர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தாங்கள் குறுகிய தூரம் பயணிப்பதைக் காரணம் காட்டியும், பருவகாலப் பயணச் சீட்டு வைத்திருப்பதைக் காரணம் காட்டியும் அவர்கள் தம்மை ஏற்றிச் செல்வதில்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்களும், மாணவர்களும் ஏ/9 வீதியில் காலை 6.30 மணியிலிருந்து பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்றனர். அந்த நேரத்தில் ஏ9 வீதியால் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து வரும் அரச மற்றும் தனியார் நெடுந்தூரப் பயணிகள் பஸ்களே பயணிக்கின்றன. அவை ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஏற்றுவதில்லை என்று கூறப்படுகின்றது. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிக்கும் நெடுந்தூர பஸ்களும் இவ்வாறே செயற்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நீண்ட நேரம் காத்திருந்து குறுந்தூர பஸ்களில் ஏறிப் பாடசாலை செல்லும்போது தாமதமாகின்றது. அதனால் பணிக்குச் சென்றும் விடுமுறை என்றே பதிவு செய்யப்படும் நிலைமை உள்ளது என்று ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பருவகாலப் பயணச் சீட்டுக்களை வைத்திருக்கும்போதும், பணம் கொடுத்து தனியார் பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உரிய தரப்பினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆசிரியர்கள், மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-159,9)

# சாரதிக்கு பிணை

சாவகச்சேரி, ஜன.10

ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட உந்துருளிச் சாரதியை 50 ஆயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் வாகன இலக்கத்தகடு இன்மை, கவனமின்றி வாகனம் செலுத்தியமை, சாரதிய அனுமதிப்பத்திரம் காப்புறுதி பத்திரம் வாகன வரிப்பத்திரம் ஆகியவை இன்மை, பொலிஸாரின் சமிக்ஞையை மீறி நிறுத்தாமல் சென்றமை, வாகனத்தின் பக்கக் கண்ணாடி இன்மை ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றங்களை சாரதி மறுத்துள்ளார்.

இதனால் வழக்கை ஒத்திவைத்த நீதிவான் சாரதியை50ஆயிரம்ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்தார். (ஐ-9)

# நிலுவைப் பணத்தை செலுத்தினார் செயலர்

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலர் சி.சத்தியசீலனின் பெயரில் உள்ள கணக்காய்வு நிலுவைப் பணம் 5 ஆண்டுகளின் பின்னர் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலராகப் பணியாற்றிய காலத்தில் குறித்தொதுக்கப்பட்ட வாகனத்துக்கு மேலதிகமாக அமைச்சின் வாகனங்களைப் பயன்படுத்திய வகையில் 3 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டும் என்று அறிக்கையிடப்பட்டது.

இருப்பினும் மாகாண கணக்குக் குழு பரிசீலனையின் பின்னர் குறித்த தொகைக்குப் பதிலாக ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 270 ரூபாவுக் கான பாவனைப் பணத்தை மீளச் செலுத்தலாம் என்று சிபார்சு செய்தது.

குறித்த கணக்கு மீதி கடந்த 4 ஆண்டுகளாகக் காணப்பட்டு அது தொடர்பில் கணக்காய்வு அறிக்கைக்காக வழங்கப்பட்ட விளக்கமும் நிராகரிக்கப்பட்ட நிலையில் குறித்த தொகையைச் செலுத்த வேண்டும் என்று கோப் குழுவும் கூறியது. இதனால் மாகாணக் கணக்குக் குழுவில் ஆராயப்பட்டு முன்மொழியப்பட்ட தொகை நிலுவையே காணப்பட்டது.

இந்தநிலையில் தற்போது குறித்த தொகை முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. இதேநேரம் வடக்கில் பல மாவட்டச் செயலர்கள் இந்த ஆண்டில் ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் புதிதாகப் பலர் மாவட்டச் செயலர்களாகப் பதவி உயர்வு பெறக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த பணம் செலுத்தப்பட்டுள்ளது. (த-105)

# கிராம ஊர்வலம்

தெல்லிப்பழை, ஜன.10

தெல்லிப்பழை சித்தியம்பதியுறை ஸ்ரீ அண்ணமார் தேவஸ்தான வருடாந்த கிராமப் பிரதட்சண விழா(கிராம ஊர்வலம்) நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு சிறப்புப் பூசைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு அண்ணமார் பெருமான் கிராம ஊர்வலத்துக்காக எழுந்தருள்வார்.

ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் சித்தியம்புளியடி ஞான வைரவர் ஆலய வீதி, சிவலோகபதி மல்லாகம், கோவிற்புலம், சூத்தாப்புலம், வத்தானைப்புலம், தம்பையப்புலம், வண்ணமாதரை, கிழானை, நாமகள் வீதி, தெல்லிப்பழை கொவ்வங்கட்டு வளைப் பதி, கட்டுவன்புலமகாவித்தியாலய வீதி, சித்தியம்புளியடி கலைச் செல்வி சனசமூக நிலைய வீதி ஊடாக சென்று இரவு ஆலயத்தை வந்தடையும்.

அதன் பின்னர் பிராயச்சித்த அபிஷேகம், சிறப்பு பூசை என்பன நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)



# மாணவர்களை ஏற்றாது சென்றால் நடவடிக்கை

கிளிநொச்சி, ஜன.10

பாடசாலைச் சீருடையில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மாணவர்களை சேவைத் தூரத்தைக் கருத்தில் கொள்ளாது அனைத்து பஸ்களும் ஏற்றிச் செல்ல வேண்டும் என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

மாணவர்களை ஏற்றிச் செல்லத் தவறும் பஸ் உரிமையாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு நிறைவான சேவையை வழங்கும் பொருட்டு இரு மேலதிக பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன என்றும் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது. (எ)

# தாக்குதல் சம்பவம்: மூவருக்கு மறியல்

கொடிகாமம், ஜன.10

கொடிகாமம், இயற்றாலை காரைக்காட்டுப் பகுதியில் கடந்த 7ஆம் திகதி நடந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 3 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 7ஆம் திகதி காணிப் பிரச்சினை தொடர்பாக இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டால் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரால் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். (எ-159)

# உயிரிழப்புக்களை தவிர்க்க கிணறுகளைக் கட்டுங்கள்!

## பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுரை



*கொடிகாமம், ஜன.10*
*கிணற்றில் விழுந்து உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பாதுகாப்பற்று இருக்கும் கிணறுகளை உயர்த்தி அமைப்பதன் ஊடாகத் தேவையற்ற உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும் என்று சாவகச்சேரிப் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.*

கடந்த மாதங்களில் பெய்த மழையால் தற்போது கிணறுகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

கிணறுகளில் தவறி விழுந்து உயிரிழக்கும் சம்பவங்கள் கடந்த வாரங்களில் அதிகரித்துள்ளன. பாதுகாப்பற்ற கிணறுகளே இந்த உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக உள்ளன.

அதனால் கிணறுகளின் கட்டுகளை உயர்த்தி அமைப்பதன் ஊடாகத் தேவையற்ற உயிரிழப்புக்களைத் தவிர்க்கமுடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் தென்மராட்சிப் பகுதியில் தவறி விழுந்து சிறுவர்கள், முதியவர்கள் என ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். (எ-159,9)

# எதிர்கால தேவைகள் தகவல்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திக்கான தேவைப்பாடுகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

2020 ஆம் ஆண்டு அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கருதப்படுகின்ற அனைத்து வகையான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன அதற்கமைவாகத் தகவல்களைக் கிராமிய ரீதியாகத் திரட்டுவதற்குத் தொடர்புடைய அலுவலர்களுக்கு வலி. மேற்குப் பிரதேச செயலர் பணிப்புரை விடுத்துள்ளார்.

திருத்தம் செய்ய வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை, புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை, தேவையான மலசலகூடங்களின் எண்ணிக்கை, காணியற்ற குடும்பங்களின் எண்ணிக்கை, வாழ்வாதார உதவி தேவையான குடும்பங்களின் எண்ணிக்கை, மின்சார இணைப்பு தேவையான குடும்பங்களின் எண்ணிக்கை, திருத்தம் செய்ய வேண்டிய கிணறுகள், வீதிகளின் விவரங்கள், பாடசாலைக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்காக்கள் ஆகியவற்றின் புனரமைப்பு, ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கட்டுமானம் ஆகிய தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

திரட்டப்படும் தரவுகள் அனைத்தும் பிரதேச செயலக உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-121)

# தொகை மதிப்பீட்டு முறை; கிளிநொச்சியில் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜன.10

2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான தொகை மதிப்பு முறைகள் தொடர்பான கருத்தரங்கு கிளிநொச்சியில் நடத்தப்பட்டது.

புள்ளி விவரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் கடந்த 3 நாள்களாக கருத்தரங்கு இடம்பெற்றது.

வடக்கின் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி கருத்தரங்கு நடைபெற்றது. கடந்த காலங்களில் எழுத்து வடிவில் தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள், இம்முறை 'கப்பி' எனும் நவீன தொழில்நுட்ப முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் தொகை மதிப்பீடானது எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளது. நவீன முறையில் தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு விரைவான விவரத் திரட்டல் வெளியிடுவதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கும் வகையில் வடக்கு மாகாணம் தழுவிய பயிற்சி வகுப்புக்கள் 3 நாள்கள் நடத்தப்பட்டுள்ளன.

பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களால் எதிர்வரும் வாரத்தில் நவீன தொழில்நுட்ப முறையிலான மாதிரி தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் எஸ் சத்தியசீலன், வடக்கு மாகாண இணைப்பாளரும் பணிப்பாளருமான உதயகுமாரி மகேஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பரமோதளன் ஜெயராணி, மாவட்ட இணைப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (க-6)

# முழுநிலாநாள் கலைவிழா

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஜனவரி மாத முழுநிலாநாள் கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது "முழுநிலா முத்து 2020" என்னும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ஐ-9)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.10



உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களா வீதி, அல்லாரை, வெள்ளாம் பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக் குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவளை, இயற்றாளை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் யாழ்ப்பாண நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பளை நகரம், புலோப்பளை, முகமாலை, எழுதுமட்டுவாள் ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் பகல அளுத்வத்த கிராமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# சிவதீட்சை வழங்கல்

இந்து சமய வேத ஆகம விதிப்படி சிறார்களுக்கு சிவதீட்சை வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி வடக்கு ஸ்ரீ நாகபூசணி சமேத ஸ்ரீஞான வீரபத்திரர் கோவிலில் இடம்பெறவுள்ளது.

மண்டுவில் இலஞ்சியாரண்யம் பதி சோலை அம்மன் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்களால் சிவதீட்சை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# சிற்பக்கலை வகுப்புக்கள் ஆரம்பம்

சாவகச்சேரி ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தால் மாணவர்களுக்கான சிற்பற்கலை பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்த ஓவியக் கூடத்தால் மாணவர்களின் ஓவியத் திறனை வளர்ப்பதற்கு சித்திர வகுப்புக்கள், ஓவியப்போட்டிகள், கண்காட்சிகள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் மாணவர்களின் சிற்பக் கலை ஆற்றலை வளர்ப்பதற்கு சிறந்த வளவாளர்களைக் கொண்டு சிற்பக்கலை பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. தரம் 3 தொடக்கம் உயர்தரம் வரையுள்ள மாணவர்கள் மற்றும் சிற்பக்கலை கற்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் இவ்வகுப்புகளில் பங்குகொள்ள முடியும். மேலதிக விவர ங்களுக்கு பெற சாவகச்சேரியில் இல 27, தேவாலய வீதியில் உள்ள ஓவியக்கூடத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தென்மராட்சியில் 674 பேரை குதறியுள்ள நாய், பூனைகள்

சாவகச்சேரி, ஜன.10

தென்மராட்சிப்பிரதேசத்தில்கடந்தவருடம் நாய், பூனைகள் மற்றும் ஏனைய விலங்குகளால் கடியுண்டும், பாதிக்கப்பட்டும் 674 பேர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவ்வாறு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மருத்துவமனையில், கடந்த வருடம் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 370 பேரும், பொது மருத்துவம் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட கிளினிக்குகளில் 79 ஆயிரத்து 869 பேரும், விடுதிகளில் 15 ஆயிரத்து 50 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடைசி மூன்று மாதங்களில் வெளிநோயாளர் பிரிவில் மாதாந்த வழமையை விட 4 ஆயிரத்துக்குமேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளணர்.

விடுதிகளில் வழமையை விட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை டெங்குவால் பாதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட 496 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் இறுதிக் காலாண்டில் ஒக்டோபரில், 51 பேரும், நவம்பரில் 143 பேரும், டிசம்பரில் 178 பேருமாக 372 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

விலங்குகளால் கடியுண்டு 674 பேரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். தெருநாய் 194, வளர்ப்புநாய் 321, பூனை 121, ஏனைய விலங்குகளால் 38 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தண்ணீர் இறைக்கும் இயந்திரம் கையளிப்பு



வவுனியா,ஜன.10
வவுனியா செட்கட்டிப்புலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு தமிழ் விருட்சம் அமைப்பால் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. பாடசாலையின் பயன்பாட்டுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது. (ஐ)

## சான்றிதழ் வழங்கல்



வவுனியா,ஜன.10
வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் ஊடாக நடத்தப்பட்ட கணினி கற்கை மற்றும் கணினி வடிவமைப்பு பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த 20 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு நேற்று வியாழன் வவுனியா தவசிக்குளம் ஓகான் நிறுவன மண்டபத்தில் மருத்துவர் ப.சத்திய நாதன் தலைமையில் நடைபெற்றது.
பிரதம விருந்தினராக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு



வவுனியா,ஜன.10
வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தால் பாடசாலை மாணவர்கள் 50 பேருக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.
முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
இதில் சங்கத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், சாரதிகள், மாணவர்கள், சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-18)

# மருத்துவர் இல்லாததால் நோயாளர் பெரும் சிரமம்

*முல்லைத்தீவு, ஜன.10*
*முல்லைத்தீவு, தேவிபுரத்தில் அமைந்துள்ள ஆரம்ப மருத்துவ நிலையத்தில் நிரந்தர மருத்துவர் இல்லாதமையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.*

வள்ளிபுனம், தேவிபுரம், வெள்ளப்பள்ளம், சுதந்திரபுரம், இருட்டுமடு, இடைக்கட்டு, கிராம மக்களின் பயன்பாட்டுக்காகவே இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ நிலையத்தில் நாளாந்தம் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கு மருத்துவர் முற்பகல் 10 மணிவரையே கடமை யில் உள்ளார். அதன்பின்னர் ஏனைய மருத்துவமனைகளுக்கு அவர் செல்கின்றார். அதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இந்த மருத்துவ நிலையத்தில் பணிபுரிவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நண்பகலுடன் மூங்கிலாறு மருத்துவமனைக்கு மாற்றப்படுகின்றமையாலும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக சம்பந்தபட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (எ-ரி3)

# முதியவரை தனியே அழைத்து பணம் கேட்டு அச்சுறுத்தல்!

சாவகச்சேரி, ஜன.10
முதியவர் ஒருவரைத் தனியே அழைத்துச் சென்று பணம் கேட்டு அச்சுறுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.
மட்டுவில், மதவடியைச் சேர்ந்த 61 வயதுடையவரே அச்சுறுத்தப்பட்டுள்ளார். அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர்.
விவசாயியான இவர் விவசாயம் தொடர்பாக அனைவருக்கும் உதவிகள் செய்பவர் என்று கூறப்படுகின்றது.
கடந்த வெள்ளிக்கிழமை மாலை இவரிடம் வந்த ஒருவர் கத்தரிச் செடியில் புழுத் தாக்கம் உள்ளது என்று தெரிவித்து என்ன மருந்து விசிறுவது என்று கேட்டுள்ளார். செடியைப் பார்த்து என்ன மருந்து என்று கூறுகின்றேன் என்று தெரிவித்து முதியவர் வந்தவரின் சைக்கிளில் ஏறிச் சென்றுள்ளார்.
தோட்ட வெளி ஒன்றை அடைந்தபோது அங்கு மோட்டார் சைக்கிளுடன் ஏற்கனவே ஒருவர் நின்றுள்ளார்.
சைக்கிளில் வந்தவரும், அங்கு நின்றவரும் சேர்ந்து முதியவரைப் பணம் கேட்டு அச்சுறுத்தினர்.
அதையடுத்து முதியவர் சத்தமிட்டுள்ளார்.
அதைக் கேட்டு அயல் தோட்டங்களில் நின்றவர்கள் வந்துள்ளனர்.
அச்சுறுத்தியவர்கள் அங்கிருந்து தப்பியோடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அங்கிருந்தவர்கள் முதியவரை வாகனம் ஒன்றில் அழைத்துச் சென்று இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.
பின்னர் முதியவரை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ9)

# நெல் கொள்வனவை துரிதப்படுத்துங்கள்!

## *மன்னார் விவசாயிகள் கோரிக்கை*

கொழும்பு, ஜன.10
நெல் அறுவடைக்குத் தயாராகவுள்ள நிலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் துரித ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார்மாவட்டச்செயலரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மாந்தை மேற்கு, கீரிசுட்டான், முள்ளிக்குளம், பெரியமடுப் பகுதிகளில் காலபோக நெற் செய்கையை அறுவடை செய்ய விவசாயிகள் தயராகி வருகின்றனர்.
அறுவடை செய்தபின்னர் நெல்லைச் சேமித்து வைப்பதற்கு வசதிகள் இல்லை என்று விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடன்களைப் பெற்றே விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் அவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். தனியார் நெல் கொள்வனவாளர்கள் குறைந்த விலைக்கே விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வார்கள்.
அதனால் விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்காது.
மன்னார் மாவட்டத்தில் நெல் சந்தைப் படுத்தும் சபையின் தலைவராக மாவட்டச் செயலரே உள்ளார்.
விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-213)

## விபத்தில் பெண் காயம்

சாவகச்சேரி, ஜன.10
வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த பெண் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்த விபத்து கல்வயல் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த 27 வயதுப்பெண்ணே காயமடைந்தார். (ஐ-9)

## வர்த்தகர்களுக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜன.10
திகதி காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனைக்கு காட்சிப்படுத்திய கொடிகாமம் பகுதி வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர்கள் பாதுகாப்பு அதிகார சபையினர் கொடிகாமம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சோதனை மேற்கொண்டனர். இதில் திகதி காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த நான்கு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து இரு வர்த்தகர்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபாவும், மற்றைய இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன. (ஐ-9)

## திருவாசக முற்றோதல்

வேலணை, ஜன.10
வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் பாராயண நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.
இதில் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள், சிவத்திரு க.கு.ணசிங்கம், கலாபூசணம் இராசையா சிறிதரன், சிவத்திரு ப.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## தர்மபுரத்தில் ஒளிரும் வீதி விளக்குகள்



கிளிநொச்சி.ஜன.10
கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட தர்மபுரம்,கல்மடு கிராமங்களில் உள்ள வீதிகளுக்கு மின் விளக்குகள் நேற்றுமுன்தினம் பொருத்தப்பட்டன
இந்தக் கிராமங்களில் உள்ள முக்கிய வீதிகள் பல இருளில் மூழ்கிக் காணப்பட்டன. இதனால் இரவு நேரங்களில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் கல்மடு பிரதேச சபையின் தர்மபுரம் வட்டாரத்தின் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் ச.ஜீவராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க மின் விளக்குகள் பொருத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-35)

### நானாட்டான் பிரதேச கால்நடைகளுக்கு

# இந்த வருடத்தில் என்றாலும் மேய்ச்சல் நிலம் ஒதுக்குங்கள்!

மன்னார், ஜன. 10
நானாட்டான் கால்நடைகளுக்கு இந்த வருடத்திலாவது மேய்ச்சல் நிலம் ஒதுக்கித் தாருங்கள் என்று நானாட்டான் கால்நடைப் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாமல் கால்நடைகள் அவதிப்படுகின்றன. அவை அவதிப்படுவதைப் பார்த்து நாங்களும் வருத்தமடைகின்றோம். எங்கள் செல்லப் பிள்ளைகள் போல கால்நடைகளை நாங்கள் வளர்த்துவருகின்றோம்.
அவ்வாறிருக்க அவற்றுக்கு மேய்ச்சல் நிலமில்லை உணவில்லை என்ற நிலை நீடிப்பதை எங்களால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை.
நானாட்டான் பிரதேசத்தில் மட்டும் இருபத்தெட்டாயிரத்துக்கும் அதிகமான கால்நடைகள் உள்ளன.
கடந்த வருடங்களில் கால்நடைகளுக்கு ஒழுங்கான மேய்ச்சல் இல்லாமல் கால்நடைகள் பல நோய் வாய்ப்பட்டு இறந்துள்ளன. பால் உற்பத்தியும் குறைந்துள்ளது.
இந்தச் சிக்கல் பற்றி உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும், போராட்டங்கள் செய்தும் பலன் இல்லாமல் போய்விட்டது.
மன்னார் கட்டுக்கரைப் பகுதியில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்பட்டபோதும் அந்த நிலத்தோடு தொடர்புபட்ட திணைக்களங்களின் இழுத்தடிப்புகளாலும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் மழை வெள்ளம் காரணமாகவும் மேய்ச்சல் நிலம் அடையாளப்படுத்துவது தடைப்பட்டது.
கட்டுக்கரைப் பகுதிக்குள் அடாத்தாக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பல காரணங்களால் நானாட்டான் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலத்தை அடையாளப்படுத்துவது தடைப்பட்டுள்ளது.
எனவே இந்த வருடத்துக்கான பெரும்போக அறுவடை முடிந்த கையோடு நானாட்டான் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலத்தை அடையாளப்படுத்தித் தரவேண்டும் என்று நானாட்டான் கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவிக்கிறார்கள். (த-213)

## இணைந்து செயற்பட ஏனோ தயக்கம்

### ஜனாதிபதிக்கு தவிசாளர் கடிதம்

தலைமன்னார், ஜன. 10
'நிறைவானதோர் கிராமம்' என்ற சமூக அடிப்படையிலான கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தை மன்னார்பிரதேசசபைக்குள், சபையுடன் இணைந்து செயற்படுத்தாமை பற்றி மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.
இந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் இரண்டு பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
அவ்வாறாயின் எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்தச் செயற்றிட்டங்களை எங்களோடு இணைந்து செயற்படுத்தாமை பற்றி தங்களின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன் என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-60)

### கலந்துரையாடல்

வவுனியா,ஜன.10
வடக்கு மாகாண பட்டதாரிகளுக்கு அரசநியமனம்வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அனைத்துப் பட்டதாரிகளும் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணப் பிரதிகளுடன் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வீடு என்ற போர்வையில் கடனாளியாக்கியது அரசு

### அங்கஜன் எம்.பி.ஆதங்கம்

கிளிநொச்சி.ஜன.10
பத்தாயிரம் வீடுகள் என்ற போர்வையில் நாற்பதாயிரத்துக்கும் அதிகமானோரைக் கடனாளியாக்கியுள்ளது நல்லாட்சி அரசு என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தை நேற்றுத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தாவது: நாம் கடந்த அரசை என நம்பி ஏமாந்து இன்று 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. 5 ஆண்டுகளில் பல நல்ல விடயங்கள் நடைபெறும் எண்ணி ஏமாற்றம் அடைந்துள்ளோம்.
வெள்ளை வான் என்றார்கள், போர் குற்றம் என பல்வேறு குற்றங்களைச் சுமத்தினார்கள்.
சாட்சியங்களுடன் நிரூபிக்க 5 ஆண்டுகள் வழங்கினோம். நடக்கவில்லை. நாம் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் கால அவகாசத்தை வழங்கியிருந்தோம். ஆனால் இறுதியில் ஏமாற்றமே கிடைத்தது. அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.
மக்களை ஏமாற்றியதே மிச்சம்.
அதன் பின்னர் அபிவிருத்தி என்றார்கள். நிலைபேறான அபிவிருத்தி எங்கும் இடம்பெறவில்லை.
கம்பெரலியவே ஆறுதல் பரிசாகக் கிடைத்தது. அதுவும் வெறுமனே 100 மீற்றர் வீதிகளாகவும், மதில்களாகவும் முழுமையாக்கப்படாத அபிவிருத்திகளாகவே கிடைத்தன.
அதுவும் அபிவிருத்தி அடைந்த பகுதிகளுக்கே மேலும் அபிவிருத்தி கிடைத்தது. அபிவிருத்திக்காக காத்திருந்த மக்கள் இன்றும் காத்திருக்கும் நிலையே உள்ளது.
மக்களின் வறுமையை இவர்களின் அபிவிருத்தியால் ஒழிக்க முடியவில்லை.
மேலும் மேலும் வறுமைக்குள் மக்களைக் கொண்டு சென்றனர்.
வீடுகள் வழங்குவதாகத் தெரிவித்து மக்களை வறுமைக்குள் தள்ளியுள்ளனர்.
வீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஏமாற்றப்பட்ட மக்கள் கடன்காரர்களாக்கப்பட்டு மேலும் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். நிதி ஒதுக்கப்படாத திட்டங்களையே கடந்த அரசு மேற்கொண்டது.
இதனால் மக்கள் ஏமாற்றப்பட்டு வறுமை நிலை மேலும் அதிகரித்துள்ளது.
வேகமாக வீடுகளை வழங்கி முதல் கட்ட பணத்தை மாத்திரம் வைப்பு செய்து மக்களை ஏமாற்றியுள்ளனர்.
வீடுகளை முழுமையாக்குவதற்கு அரசிடம் பணம் இருந்திருக்கவில்லை. இவ்வாறு மக்களை அபிவிருத்தி என்ற போர்வையில் நல்லாட்சி அரசு மக்களை ஏமாற்றியுள்ளது.
இன்றைய அரசு ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளது. அவர்களில் சமுர்த்திப் பயனாளிகளாகஉள்ளகுடும்பங்களுக்கேமுன்னுரிமை வழங்கப்படவுள்ளது.
இன்னும் பல்வேறு அபிவிருத்திகளை நாம் பெறவுள்ளோம். உரிமை எனக் கூறி இருப்பை நாம் இழந்துள்ளோம். இருப்பை தக்க வைத்துக்கொண்டே உரிமையைப் பெறவேண்டும்.
எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் கொண்டுவரப்படும் வரவு-செலவுத் திட்டத்தில் மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்-என்றார். (க-6,35)


## காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் தலைவியைக் குடும்பத்தோடு அழைக்கின்றது ரி.ஐ.டி

வவுனியா, ஜன. 10
காணாமல் ஆக்கப்பட்டோரின் வவுனியா சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதாவைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.



காணாமலாக்கப்பட்டவர்களின் வவுனியா உறவுகள் வவுனியா ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஆயிரத்து 55 ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
அந்தச் சங்கத்தின் தலைவி தமது இடத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அழைப்பு விடுத்த விடயத்தைத் தெரிவித்தார்.
"எனது மகள் காணாமல் போனது தொடர்பாக என்னால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக என்னையும் எனது கணவரையும் எதிர்வரும் 13ஆம் திகதி பயங்கரவாத விசாரணைப் பிரிவு 3க்கு வருமாறு அழைப்பு விடுத்து ள்ளனர். இதுவரையில் இரு தடவைகள் என்னைத் தனியே அழைத்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.
மூன்றாவது தடவையாக இந்த விசாரணைக்கு என்னையும் எனது கணவரையும் அழைத்துவருமாறு கூறியு ள்ளனர். கடந்த தடவைகள் என்னை விசாரணைக்கு அழைத்த சமயத்தில் எனது மகள் தொடர்பாகவும் எனது குடும்பத்தாருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பு இருந்ததா போன்றவற்றையும் வினவினார்கள்."
என்றார். (த-18)

# இடையூறு ஏற்படுத்தும் வனவளப் பிரிவினர்



மன்னார், ஜன. 10

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் தனிக்கல்லுக்குளம் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான இடங்களிலும் வீதிகளிலும் வனவளப் பிரிவினர் எல்லைக் கற்களைப் போட்டு அந்த மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அரசு மாறிய பின் எந்தவித அறிவித்தல்களும் இன்றி மக்களின் உறுதிக்காணிகள், கிணறுகள், வாழ்விடங்கள் அனைத்திலும் எல்லைக்கற்கள் போட்டு வருகின்றனர். இது மிக மோசமான நடவடிக்கை, சட்டத்துக்குப் புறம்பான அதிகாரிகளின் குற்றச் செயல். இந்தச் செயல்களுக்கு யார் நடவடிக்கை எடுப்பது?.

தற்போதுள்ள அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் மேற்குறித்த பிரிவினரின் அடாவடிகள் அதிகரித்துவிட்டன.

இந்தச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து தமிழர்களிடம் நன்மதிப்பைப் பெறமுன்வாருங்கள்.

அல்லது தமிழர் விரோத போக்குடையவர்களாக இருந்தால் எப்போதும் தமிழ் மக்களின் மனதை வெற்றி கொள்ள முடியாது என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (த-213)

# சுவிஸ் உளவு அதிகாரிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு ஜன. 10

வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டு துன்புறுத்தப் பட்டார் எனக் குறிப்பிடப்படும் சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கார்னியர் பெனிஸ்டர் பிரான்சிஸ் விவகாரத்தில் உண்மைத் தன்மையைக் கண்டறிய, சுவிஸ் உளவுத் துறை அதிகாரிகள் குழு இலங்கை வந்துள்ளது.

கார்னியர் பெனிஸ்டர் பிரான்சிஸ் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து அவர்கள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

அவர்களின் விசாரணைக்கு, இலங்கை உளவு அமைப்புக்களும் உதவி வழங்கியுள்ளன. தம்மிடமிருந்த ஆதாரங்களையும், சுவிஸ் குழுவுடன் பகிர்ந்துள்ளனர். கார்னியர் கடத்தப்பட்டார் எனக் குறிப்பிடப்படும் இடங்களுக்கு நேரில் சென்று, சுவிஸ்குழு ஆய்வு செய்தது.


இதேவேளை, சுவிஸ் உளவு அமைப்பு குழுவினரின் அறிக்கையிலும், கார்னியர் கடத்தப்பட்டமைக்கு ஆதாரமில்லையென குறிப்பிடப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தக் கடத்தல் விவகார செய்தியை முதலில் வெளியிட்ட நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு, செய்தியை வழங்கிய ஊடகவியலாளரும் தற்போது நாட்டை விட்டு வெளியேறி சுவிஸில் அடைக்கலம் புகுந்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)



கிளிநொச்சி கிராஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் 60 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தீவக விருட்சம் செண்பகம் அமைப்பு அண்மையில் இவற்றை வழங்கியது என்று அந்த அமைப்பினர் தெரிவித்தனர். (த)

# வீடு கட்டுவதைத் தொடர அடுத்த கட்ட நிதி வருமா?

## வவுனியா மாவட்ட மக்கள் பரிதவிப்பு



*வவுனியா, ஜன. 10*

*கடந்த அரசின் காலத்தில் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச 'அனைவருக்கும் வீடு'எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் வழங்கிய மாதிரி வீட்டுத் திட்டங்களுக்கான மிகுதிப் பணம் வழங்கப்படாததால் வீடுகளைக் கட்டிமுடிக்க முடியாதநிலை ஏற்பட்டு இடையூறுகளை எதிர்கொள்கின்றோம் என்று பாதிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.*

வவுனியாவின் நான்கு பிரதேச் செயலகங்களை உள்ளடக்கிய மக்களுக்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊடாக 126 மாதிரி கிராமங்களில் 2ஆயிரத்து 935 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு வீட்டுத் திட்டத்துக்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு 68 மாதிரி கிராமங்களுக்கும் 2019 ஆம் ஆண்டு 58 மாதிரி கிராமங்களுக்கும் அடிக்கல் நடப்பட்டது.

இந்தநிலையில் அதற்கான நிதி வழங்கல் நடவடிக்கைகள் படிமுறைகளாக வழங்கப்பட்டு வீடமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதால் நிதி இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் ஆட்சி மாறியவுடன் நிதி எதுவும் விடுவிக்கப்படவில்லை.

ஒருவேளை, முன்னைய அரசு ஆட்சியில் இருந்திருந்தால் அபிவிருத்தி உட்பட வீடமைக்கும் வேலைகள் தொடர்ந்திருக்கும் என்று கருத வேண்டிய நிலையை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

புதிய அரசு ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் கடந்துள்ளபோதும் வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான மிகுதிப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை.

வீடுகள் அரைகுறையாகக் காட்சியளிக்கின்றன. நீண்டகாலமாக தற்காலிக வீடுகளில் வசித்துவந்த நிலையில் வீடுகள் அமைக்க முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது. மேலதிக நிதி இடைநிறுத்தப்பட்டுள்ளது. எமது நிலையைக் கருத்திற்கொண்டு முன்னைய அரசு உருவாக்கிய குறித்த திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

"வவுனியாவில் இதுவரை பூர்த்தி செய்யப்படாத மாதிரிக் கிராமங்களுக்கு அண்ணளவாக ஆயிரத்து 246 மில்லியன் ரூபா பணம் இன்னும் தேவைப்படுகிறது. இது தொடர்பாகத் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் நிதி வழங்கினால்தான் வீடுகள் கட்டுவது தொடர்ந்து இடம்பெறும்." என்று வவுனியா மாவட்ட வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் தெரிவித்தார். (த-110)

# துமிந்த யாரையும் சுடவில்லை

## திலங்க தகவல்

கொழும்பு ஜன. 10

எனக்கு தெரிந்த வகையில் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த யார் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

நானும், துமிந்த சில்வாவும் சமகாலத்தில் அரசியலில் பிரவேசித்தவர்கள். அவர் ஆரம்ப காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்டிருந்தார்.

தேர்தல்களின் போது எனக்கும் அவருக்கும் கடுமையான போட்டி இருந்தது. இருந்த போதிலும் ஒருவருக்கொருவர் பரஸ்பர உறவை பேணி நண்பர்களாகவே இருந்தோம்.

நானறிந்த வகையில், அவர் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதில்லை. அடித்தட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவது குறித்து மாபெரும்கனவு அவரிடம் இருந்தது.

அதற்காக அவர் அயராது உழைத்து வந்தார்.

நான் அவரை ஆறு தடவைகள் சிறைச்சாலைக்குச் சென்று பார்த்தேன். அவரின் தலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் போது ஒரு வகையான உலோகப் பொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த சத்திர சிகிச்சை சிங்கப்பூரிலேயே மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சத்திர சிகிச்சையின் பின்னரான மருத்துவ வசதிகள் இலங்கையில் இல்லை.

சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவரும் துமிந்த சில்வா மாத்திரைகள் உட்கொள்வதால் அடிக்கடி தலைவலிக்கு உள்ளாகி வருகிறார்.

அவரை தூக்கில் போட வேண்டிய தேவை இருக்காது. அவரின் உடல்நிலை மிகவும் நலிவுற்ற நிலையில் காணப்படுகிறது. அவருக்கு தேக ஆரோக்கிய விடயங்கள் புரிவதற்கும் சிரமப்பட்டு வருகிறார்.

ஜனாதிபதி அவருக்கு நேரடியாக பொது மன்னிப்பு வழங்க முடியாது. இதற்கு பிரத்தியேக் குழுவொன்றை நியமித்து, அக்குழு அளிக்கும் அறிக்கையை ஆராய்ந்து பார்த்தப் பின்னரே பொது மன்னிப்பு வழங்க முடியும் என்றார். (ஒ.5)

# எவ்.சி.ஐ.டி கலைகிறது

கொழும்பு ஜன. 10

நிதிக் குற்ற விசாரணைப் பிரிவை (எவ். சி.ஐ.டி.) கலைக்கும் அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு எதிரான வழக்குகளைத் தொடர வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஒரு சட்டவிரோத நிறுவனம் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு என்று அவர் கூறினார்.

இதுபோன்ற குற்றங்களுக்கு ஒரு தனி அலகு இருப்பதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை.

அனைத்து வழக்குகளும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்படும்-என்றார். (ஒ.5)

# ரஞ்சனைக் கைகழுவியது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜன. 10

2020ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதி வாரத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வேட்புமனு வழங்காதிருக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுத்துள்ளது.

அத்துடன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை முன்னெடுத்து கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. கடந்த காலங்களில் மகாநாயக்க தேரர்களையும். நீதிபதிகளையும் விமர்சித்துவந்த ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுத் தேர்தலில் களமிறங்க வேட்புமனு வழங்க வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சித்தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும். கட்சி தலைமைப்பீடம் இது தொடர்பில் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை. தற்போது தொலைபேசி உரையாடல்கள் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளதாலேயே ரஞ்சனை ஓரங்கட்டும் முடிவை எடுப்பதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளது. (ஒ,5,44)

# ரஞ்சனின் நடவடிக்கையால் நம்பிக்கையிழப்பு

## சாடுகிறது சு.க.

கொழும்பு. ஜன. 10

முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் முக்கியமான துறைகள் மீதான பொது மக்களின் நம்பிக்கை இழக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், அதனை மீட்டெடுக்க குரல்பதிவுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியது.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதன் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரஞ்சன் ராமநாயக்கவிடம் கைப்பற்றப்பட்டுள்ள குரல் பதிவுகள் மூலம் பொது மக்களுக்குப் பயத்தையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்த அவர் முற்பட்டுள்ளதுடன், நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் மீதான நம்பிக்கையையும் இழக்கச் செய்ய முற்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் சிறிய விடயமல்ல. இதைக் கடந்து செல்ல ஒரு சமூகத் சீர்திருத்தமே செய்யப்பட வேண்டியுள்ளது. குரல் பதிவுகளில் கடந்த அரசின் ஒளிப்படங்களே உள்ளன.

நீதிமன்றக் கட்டமைப்பு மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு மீதான நம்பிக்கையை அவர் முற்றாக இல்லாதொழித்துள்ளார். இது ஒரு பாவச் செயல் - என்றார். (ஒ,5,24)

# பாதுகாப்பு எச்சரிக்கை!

## விடுத்தது அமெ. தூதரகம்

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம், இலங்கையில் வசிக்கும் தமது நாட்டுக் குடிமக்களுக்குப் பாதுகாப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது. மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் பதற்றத்தைத் தொடர்ந்து ஏற்படக் கூடிய 'பாதுகாப்பு அச்சுறுத்தல்' குறித்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் அதிகரித்த பதற்றம் வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கக் குடிமக்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும். இது உலகளாவிய எச்சரிக்கையாகும். அனைத்து அமெரிக்கர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் அமெரிக்கத் தூதரக இணையத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கின்றோம்' என்று தூதரகம் கீச்சகத்தில் பதிவிட்டுள்ளது. (ஒ,5)

# ராஜபக்ஷாக்களுக்கிடையில் அதிகாரப் போட்டி ஆரம்பம்

*கொழும்பு ஜன. 10*

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையில் அதிகாரப் போராட்டம் ஆரம்பித்திருப்பதை ஜனாதிபதியின் உரையில் இருந்து உணர்ந்து கொள்ள முடியும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் இரண்டாம்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தேர்தல் மேடையில் தெரிவிக்காத விடயமொன்றை அவரது அக்கிராசன உரையில் தெரிவித்திருந்தார். அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தை நீக்கிவிடவேண்டும் என்பதே அதுவாகும். அதேபோல் ஜனாதிபதியின் இந்தக் கூற்றை, தற்போது விஜயதாச ராஜபக்ஷ தனிநபர் பிரேரணையாக முன்வைத்திருக்கும் 22ஆம் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

விஜயதாசவினால் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இரண்டு பிரேரணைகளையும் ஜனாதிபதி ஏற்றுக்கொள்கின்றார் என்பதை அவரது உரையில் இருந்து விளங்கிக்கொள்ளலாம். ஆனால் இந்தப் பிரேரணை அரசின் பிரேரணை யாக இருக்குமாக இருந்தால் அரச பிரேரணையாக இதனை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்திருக்க லாம்.

இந்த நாட்டின் வரலாற்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொண்டு ஆட்சி செய்த அரசுகள் அதனைக்கொண்டு நாட்டுக்கு நன்மையான எந்த வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையை பெற்றுக்கொண்டு 16முறை அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டது.

2010இல் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் வரப்பிரசாதங்களை வழங்கி பெரும்பான்மையை அமைத்துக்கொண்டார். அதன் மூலம் தொடர்ந்து தான் அதிகாரத்தில் இருப்பதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டிருந்தார். அதனால் கோத்தாபய ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருவது ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அல்ல என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது.

ஜனாதிபதியின் உரையில் தனது ராஜபக்ஷ குடும்பம் தொடர்பாக 8 நிமிடங்கள் கதைத்தார். ராஜபக்ஷவினர் தொடர்பாகக் கதைப்பவர்கள் யாரும் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரைத் தெரிவிக்க மறப்பதில்லை. ஆனால் கோத்தாபய, மஹிந்த ராஜபக் ஷவின் பெயரை ஒரு இடத்தில் கூடத் தெரிவிக்காமல் இருந்தது, அவர்களுக்கிடையிலான அதிகாரப்போராட்டத்தின் ஆரம்பமாகும். எதிர்காலத்தில் இன்னும்பலவிடயங்களைக்கண்டுகொள்ளலாம் -என்றார். (ஒ,5)

# எங்களுக்கு தொடர்பில்லை

## திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு ஜன. 10



எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கைதுகளுடன் அரசுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் தொடர்பாக சஜித் மிக அக்கறையுடன் பேசி வருகின்றார். கடந்த அரசில் இவர்கள் கைது செய்யப்படும் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை வகித்த அவர் அமைதியையே காத்து வந்தார். கடந்த அரசில் தோட்டப்புறக் காணிகள் பல தனியார் துறைக்கு ஒப்படைக்கப்பட்டன.

இதனால் தோட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இவற்றை அரசு பொறுப்பேற்று நடத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கைது செய்வதால் அரசுக்கு எந்த வரப்பிரசாதமும் கிடைக்கப் போவதில்லை. அரசின் தலையீட்டின் காரணமாகவும் அவர்கள் கைது செய்யப்படவில்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது 19ஆவது திருத்தத்தை மாற்றி அமைப்பதற்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்காக முழு முயற்சிகளையும் முன்னெடுக்கவுள்ளோம்' - என்றார். (ஒ,5)

# அவமானம்!!!

## ரஞ்சனால் கொதிக்கும் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு ஜன. 10



சமூக ஊடகங்களில் வெளியான சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடல்களை சேமித்து வைத்திருந்ததன் மூலம், ரஞ்சன் ராமநாயக்க சட்டவிரோதமான மற்றும் முற்றிலும் அவமானகரமான காரியத்தைச் செய்துள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாடியுள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிற்கு கருத்து கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மாதிவெலயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து கடந்த நான்காம் திகதி கைது செய்யப்பட்டார். குற்றப்புலனாய்வுத் திணைக்களம், நிதிக் குற்றப் பிரிவு மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் புலனாய்வு ஆணைக்குழு ஆகியவற்றின் விசாரணைகளுக்குத் தேவையானது என்று சந்தேகிக்கப்படும் பல இறுவட்டுக்கள் அவரின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டன. இதன் பின்னர் பல குரல் பதிவுகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இந்தச் சர்ச்சையில் முன்னாள் ஜனாதிபதியையும் தொடர்புபடுத்தி, சமூக ஊடகங்களில் கருத்துக்கள் பரி மாறப்பட்டு வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

# சந்திரிகா என்றாலே பொல்லாத பயம்

## அவரே சொல்கிறார்



கொழும்பு ஜன. 10

சந்திரிகா என்று கூறினாலே அனைவரும் பயப்படுகின்றார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் பிறந்த தினத்தை கடைப்பிடிப்பதற்கு சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த போதிலும் அதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனது தந்தையின் பிறந்த தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் எனக்கு அது தொடர்பில் அறிவிக்கவில்லை. எனவே வழமை போன்று நான் எனது சகோதரியுடன் வருகை தந்து மலரஞ்சலி செலுத்தினேன். சந்திரிகா என்றால் அனைவரும் பயப்படுகின்றனர். அது நோயாகும். அந்த நோய்க்கு மருந்து கிடையாது' என்று சந்திரிகா தெரிவித்துள்ளார். (ஒ.5)

## ரூ. 1000ஐ முன்னிறுத்தி

# மலையக மக்களின் உரிமைகளை மூடி மறைக்கவேண்டாம்

கொழும்பு, ஜன. 10

1000 ரூபா சம்பளத்தை மட்டும் முன்னிலைப்படுத்தி மலையக மக்களுக்கான உரிமைசார் விடயங்களை மூடிமறைக்க வேண்டாம். அந்த மக்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக தமிழ் முற்போக்கு கூட்டணியால் வகுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்க்கைச் செலவு குறைக்கப்படும், அபிவிருத்தி திட்டங்கள் துரிதப்படுத்தப்படும், அரசதுறை பலப்படுத்தப்படும் என்றெல்லாம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வாக்குறுதிகள் யதார்த்தபூர்வமாக நடைபெறுமெனில் அதனை நாம் ஏகமனதாக வரவேற்போம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. அதனையும் வரவேற்கின்றோம். வெகுவிரைவில் அந்தத் தொகையை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம்.

தோட்டத்தின் லயன் யுகத்துக்கு முடிவுகட்டி தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சி அரசால் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆயிரம் ரூபா விடயத்தை மட்டும் முன்னிலைப்படுத்தி அந்தத் திட்டங்களை மூடி மறைத்து, முன்நோக்கி பயணித்த விடயத்தை மீண்டும் பின்நோக்கி இழுப்பதற்கு முயற்சிக்கவேண்டாம்.

எமது மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற உரிமைகளை மீளப்பறிக்க வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம். பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், - என்றார். (ஒ.5,44)

# ஆயுதங்களை போட்டவர்களை மீண்டும் தூக்கச் சொல்கிறீர்களா?

## விஜயதாஸவிடம் மனோ கேள்வி



கொழும்பு, ஜன. 10

கடந்த காலங்களில் ஆயுதம் தூக்கி விட்டு, பின் அவற்றை கைவிட்டு, நாடாளுமன்றப் பாதையைத் தெரிவு செய்தவர்களைப் பார்த்து மீண்டும் ஆயுதப் போருக்கு போங்கள். காட்டுக்குள் போங்கள். பங்கருக்குள் போங்கள் என்று சொல்லுகிறீர்கள். இவ்வாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக் ஷவை நோக்கி, எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சிரச தொலைக்காட்சியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் நடந்த விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மனோகணேசன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

இந்த நாட்டில் இனங்கள் மத்தியில் நல்லிணக்கம் இல்லாமல் இருப்பதற்கு சிறுபான்மை கட்சிகள் இருப்பதே காரணம் என்று கூறுகிறீர்கள். தேர்தல்வெட்டுப்புள்ளியை உயர்த்தி சிறு கட்சிகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்கிறீர்கள். இன்று இந்நாட்டில் நல்லிணக்கம் இல்லை என்பது சரி. அது ஒரு நோய். ஆனால், அந்த நோய்க்கு நீங்கள் சொல்லும் மருந்துதான் பிழையானது.

நல்லிணக்கம் இல்லாமல் போனதற்கு இந்த நாட்டு பெரும்பான்மை கட்சிகள் சிறுபான்மை மக்களை அரவணைக்கத் தவறியதே காரணம்.

இந்நாட்டில் இப்போது, தமிழ் பேசும் மக்கள் தமது தாய்மொழியில் தமது தாய்நாட்டை உணர்வோடு, 'தாயே' என தேசிய கீதமாக பாட முடியாத நிலைமைக்கு நீங்கள் கொண்டுவர முயல்கிறீர்கள். இதுதான் பிரிவினை. சிறுபான்மை இனங்களை ஒதுக்கி வைப்பதுதான் பிரிவினை. ஒரே நாட்டை உருவாக்க வேண்டும் என்றால், இந்நாட்டில் வாழும் எல்லா இனங்களுக்கும், மொழிகளுக்கும், மதங்களுக்கும் அங்கீகாரம் தருவதன் மூலமே அதைச் செய்ய முடியும் என்பதை உணருங்கள்.

இந்தியாவில் சிறுபான்மை சீக்கிய இனத்தைச் சேர்ந்த மன்மோகன் சிங் பிரதமர் ஆக முடியும். அப்துல் கலாம் என்ற முஸ்லிம் ஜனாதிபதி ஆக முடியும். இங்கே லக்ஸ்மன் கதிர்காமர் கூட பிரதமராக முடியாது. இங்கே இனவாதம் உள்ளத்தில் ஆழமாக ஊறி விட்டது. அதை நீங்கள் இன்னமும் வளர்க்கிறீர்கள்.

இன்று உள்ள தேர்தல் சட்டத்தை திருத்த நாமும் தயார். ஆனால், எப்படித் திருத்துவது? இப்படி வெட்டுப்புள்ளியை உயர்த்தி சிறு கட்சிகளை ஒழிப்பதன் மூலம் அல்ல - அது இருக்கும் நிலைமையை இன்னமும் மோசமாக்கி விடும் என்றுள்ளது. (ஒ.5)

## ஈரானில் தங்கியுள்ள

# இலங்கையர் தொடர்பில் முழுமையான அவதானம்

ஈரானில் 100இற்கும் குறைவானளவு இலங்கையர்களே இருக்கின்றனர் என்றும், அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அரசின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த அமைச்சரிடம், அமெரிக்கா- ஈரான் மோதல் நிலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரான் - அமெரிக்கா விவகாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது. எனவே, இவ்விவகாரத்தில் ஊகத்தின் அடிப்படையில் எந்த விடயத்தையும் குறிப்பிடக் கூடாது. இராஜதந்திர மட்டத்திலேயே இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும்.

எனினும், ஈரான்மீது அமெரிக்கா பொருளாதரத்தடை விதிக்கும் பட்சத்தில் இலங்கைக்கு ஏற்படும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சக்தி எம்மிடம் இருக்கின்றது. 2014இல் இதேபோன்றதொரு நிலைஏற்பட்டது. எனினும், நெருக்கடி நிலைமையை நாம் உரிய வகையில் புரிந்துணர்வு அடிப்படையில் முகாமைசெய்தோம்.

அத்துடன், 100இற்கும் குறைவானளவு இலங்கையர்களே ஈரானில் உள்ளனர். எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அவர்களின் நலன்புரி விடயங்கள், பாதுகாப்பு உட்பட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இராஜதந்திர மட்டத்தில் எல்லாவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஒ.5,44)

# முடிவில் மாற்றமில்லை

## சுசில் பிரேம்ஜயந்த தெரிவிப்பு



கொழும்பு ஜன. 10

இலங்கையின் இணை அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அரசு முற்றாக நிராகரிப்பதாக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் இணைந்து இலங்கை ஐ.நாவில் சமர்ப்பித்துள்ள மேற்படி பிரேரணையில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்களை ஏற்க முடியாதெனக் குறிப்பிட்ட அவர், திருத்தமின்றி அந்தப் பிரேரணையை முழுமையாக அரசு நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கைபிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், கடந்த அரசு நீதித்துறையையும் பொலிஸ் துறையையும் எவ்வாறு நடத்தியுள்ளது. எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கும் போது பெரும் கவலையாக உள்ளது. நீதித்துறை பெரும் அபகீர்த்திக்கு உள்ளாகியுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள மற்றுமொரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான அவசியம் கிடையாது. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் பல விடயங்கள் வெளிவரவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ.5)

# மீண்டும் போர் வேண்டாம்

## கட்டளைத் தளபதியின் எதிர்பார்ப்பு



யாழ்ப்பாணம்.ஜன.10

இந்த நாட்டில் மீண்டும் ஒரு போரை நாங்கள் எதிர்பார்க்க வில்லை. அழகிய நாட்டைக் கட்டியெழுப்பவே எதிர்பார்த்துள்ளோம். மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் 24 மணித்தியாலங்களும் கடமையில் இருப்பர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியின் அறிவுரைக்கு அமைவாக, பலாலி கட்டளைத் தலைமையகத்தில் வைத்து மாணவர்களுக்கு சைக்கிள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. அதில் கலந்துகொண்டு அவர் தெரிவித்ததாவது,

“நாட்டில் இடம்பெற்ற 30 வருட காலப் போரால் உடைமைகள், பல்வேறு சொத்துக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இதனைக் கருத்தில் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். யாழ். மாவட்டத்தில் இதுவரை மாணவர்களுக்கு 5000 சைக்கிள்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளன. மருத்துவத் தேவைகள், வீட்டு வசதிகள் எனப் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு இராணுவத்தினர் எப்போதும் தயாராகவே உள்ளனர் - என்றார்.

நிகழ்வில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கையை இலகுபடுத்துவதற்காக படையினரால் 120 மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிக்கப்பட்டன. (க-111)



# மகிழடித்தீவு மருத்துவமனை தேசிய ரீதியில் முதலிடம்

மட்டக்களப்பு.ஜன.10

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மகிழடித்தீவுப் பிரதேச மருத்துவமனைக்கு தேசிய ரீதியில் முதலிடம் கிடைத்துள்ளது.

ஆரம்ப சுகாதார அமைப்பில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றியதன் அடிப்படையில், சுகாதார மற்றும் சுதேசமருத்துவ சேவை அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வசதி, வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்ற படுவான்கரைப்பிரதேசத்தில் உள்ள பிரதேச மருத்துவமனை, இவ்வாறு தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

வெளிவந்துள்ளது புதிய SBA புத்தகம்

மறுசீரமைக்கப்பட்டுள்ள புதிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டப் (SBA) புத்தகம் வெளிவந்துள்ளது. அதிபர், ஆசிரியர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும் பொருட்டும் ஆசிரியர்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளைக்களையும் பொருட்டும் ஆசிரிய ஆலோசகர் **N.P. ஸ்ரீந்திரனால்** தயாரிக்கப்பட்டுள்ளது.

மிகக் குறைந்த விலையிலேயே ! விற்பனையாகி வருகின்றது. அதிபர்கள், ஆசிரியர்கள், புத்தகசாலைக்கு விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும். ஏகவிநியோகஸ்தர்

“ அபி பொத்தக நிலையம் ”,
இல 1664, K.K.S வீதி, இணுவில்

(CS 30478) (04.17)

077 960 3001

# ரூ.15 லட்சம் பெறுமதியான 50 மரக்குற்றிகள் மீட்பு

மட்டக்களப்பு.ஜன.10

வாழைச்சேனை வட்டார வனப் பிரிவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பை அடுத்து 15 இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகள் வாகனங்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ். தணிகாசலம் தெரிவித்தார்.

முறுத்தானை மற்றும் அக்குறானை போன்ற பிரதேசங்களில் சட்ட விரோதமாக மரம் வெட்டப்படுவதாகக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அங்கு 3 உழவு இயந்திரங்களில் 50 மரக் மரக்குற்றிகள் ஏற்றப்பட்ட நிலையிலும், மோட்டார் சைக்கிள் ஒன்றும், சமையலுக்குப் பயன்படுத்திய பாத்திரங்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனஎன வனஉத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் மேலும் தெரிவித்தார். (க)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி சுஜிதா ரமணிதரன்
Congratulations
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் மாணவியும்,
ஆசிரியரும், நிர்வாக உறுப்பினருமாகிய இவர் **07.12.2019**
**யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டம்** பெற்று
வித்தியாலயத்திற்கும்
தனது குடும்பத்திற்கும்
பெருமை சேர்த்து தந்தமையை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
**பழைய மாணவர் சங்கம்
யா/உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்.**



7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி


லிங்கநாயகம் மங்கையர்க்கரசி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**சாரங்கன் (சாரு)**
காலமெல்லாம் எம் நெஞ்சத்தில்
கனதியாய் உறைகின்ற
எம் செல்லம் சாரு
நேசம் கொண்ட நெஞ்சங்கள்
பாசமுடன் பருதவிக்க
பாரைவிட்டு பறந்ததேனோ
ஏங்குகின்றோம் இங்கிருந்து
எங்கு சென்றீர் சாரு

மலர்வு 22.06.1989
உதிர்வு 28.12.2012
திதி : பூரணை (10.01.2020)

குடும்பத்தினர்.
03ஆம் வட்டாரம்,
நெல்வரை, நெடுந்தீவு.



ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **அருணாசலம் நமசிவாயம்**
(இளைப்பாறிய ஆசிரியர், புல்லாங்குழல் வித்துவான்,
கலாபூஷணம் வேணுகானமணி)

தோற்றம் 17.02.1925
மறைவு 17.12.2013

திதி: பூரணை (10.01.2020)

அன்பிற்கும் உயரிய பண்பிற்கும்
அறிவூட்டலுக்கும் ஓர் உதாரணமாய்த் திகழ்ந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் தெய்வீக
- பாதாரவிந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும்
- எம் அன்புத் தெய்வமே!
உங்களின் பாதச்சுவடுகளில் தடம் பதித்து
நல்வழியில் வாழ்க்கையை நகர்த்தும்
எங்களின் மனத்திரையில் என்றென்றும்
நிலைத்திருக்கும் உங்கள் அன்புருவம்.
ஓம் சாந்தி!
உங்கள் பாதங்களில் பணிந்து பாசமுடன் நினைவுகூரும்

435/3, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அநுராதபுரத்தில் களமிறங்கும் மேர்வின்

*கொழும்பு, ஜன. 10*

பொதுத்தேர்தலில் சர்ச்சைக்குரிய முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அநுராதபுரம் மாவட்டத்தில் களமிறங்கவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஊடாகவே தான் போட்டியிட உத்தேசித்துள்ளேன் எனத் தெரிவித்த அவர், தனக்கு வேட்பு மனு வழங்கப்படாவிட்டால் சுயேச்சையாகவேனும் களமிறங்குவேன் என அறிவித்துள்ளார்.

'அநுராதபுரத்தை ஆட்சிசெய்த துட்டகைமுனு மன்னனின் கொள்கைவழி நடக்கும் நான், அந்த மண்ணிலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவேன். சிறிது கால ஓய்வின் பின்னர், என்னை புதுப்பித்துக் கொண்டே அரசியல் களம் புகுந்துள்ளேன். ஆனால், தாமரை மொட்டு அணியுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. அந்தக் கட்சி பக்கம் செல்லவும் மாட்டேன்' என்றும் மேர்வின் சில்வா கூறினார்.

சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக அவர் மாறியமையால் 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால், ராஜபக்ஷக்களுடன் முறுகலை ஏற்படுத்திக்கொண்ட மேர்வின் சில்வா, ஐக்கிய தேசியக்கட்சிக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கிவந்தார். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சஜித்துக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,44)

# புள்ளி விவர புயலான சஜித்

*கொழும்பு ஜன. 10*

**நல்லாட்சி அரசால் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டவர்களை தற்போதைய அரசு பதவிநீக்கி, அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இதனை தெரிவித்தார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நியமனம் வழங்கப்பட்ட 167 பேர், தேசிய கொள்கைகள் அமைச்சின் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு, வடக்கு மாகாணம் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் நியமனம் வழங்கப்பட்ட 6 ஆயிரத்து 800 திட்ட உதவியாளர்கள், பாடசாலை சுகாதார உதவியாளர்கள் 100 பேர், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்பொருளியல் துறை ஆயிரத்து 500 பேர் பணி நீக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் அனைத்தும் முறைப்படி வழங்கப்பட்டன என்றும் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் பணிபுரியும் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன- என்றார். டெங்கு ஒழிப்பு திட்டத்தில் உதவியாளராக நியமிக்கப்பட்ட ஆயிரத்து 100 க்கும் மேற்பட்டவர்கள் மார்ச், 2020 பிறகு இடைநிறுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவித்தார். ஐ.தே.கவுடன் இணைந்த தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள அரச உத்தியோகத்தர்கள் அரசியல் பழிவாங்கலாக வேட்டையாடப்பட்டு வருகின்றனர் எனக் குற்றம் சாட்டினார். (ஒ.5)



# கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்

*கொழும்பு ஜன. 10*

போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பொருத்தமற்ற அனைத்து பேருந்துகளையும் சேவையிலிருந்து நீக்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பழைய பேருந்துகள் தொடர்பாக ஆராயுமாறு இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பழுதுபார்த்து மீண்டும் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்துகளை மாத்திரம் போக்குவரத்தில் ஈடுபடுத்துமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதுளை - பசறை, மடுல்சீமை வீதியில் கடந்த 6ஆம் திகதி மாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் பலர் உயிரிழந்துள்ளமையுடன், காயமடைந்துள்ளனர். இதன் காரணமாகவே அனைத்து பேருந்துகளையும் சோதனைக்குட்படுத்துமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ.5)

## கோத்தா பயணத்தின் எதிரொலி

# மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பணி துரிதம்

*கொழும்பு, ஜன. 10*

வெரஹேர மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளவரும் பொது மக்களுக்கான சேவைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் திடீர் ஆய்வுப் பயணத்தைத் தொடர்ந்து திணைக்களத்தின் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என மக்கள் தெரிவித்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வெரஹேர மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்குச் சென்ற அமைச்சர், பணிகள் தொடர்பில் ஆய்வுக்குட்படுத்தினார். இதன்போது சேவைகள் தொடர்பில் பொது மக்களிடமும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

சாரதி அனுமதிப்பத்திரம் உரிய ஆவணங்கள் முழுமைப்படுத்தப்பட்டு இரண்டு மணித்தியாலங்களில் வழங்கப்படுகிறது எனவும், சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னர் குறுஞ் செய்தியொன்றும் அனுப் பப்படுகின்றது எனவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

சாரதி அனுமதிப் பத்திரங்ளைப் பெறுவது, மருத்துவ சான்றிதழ்களைத் துரிதமாக பெறுவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

ஓட்டுநர் பயிற்சி பாடசாலைகளிலிருந்து உரிமம் பெற்றுக்கொள்ள வருபவர்களுக்கு முன்னுரிமையளிக்காது பொது மக்களுக்கு வழங்கும் ரோக்கன் எண்ணுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமெனவும், வெளிநாட்டவர்கள் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக அதிகம் பணம் செலுத்துகின்றனர், அவர்கள் சாரதி அனுமதிப் பத்திரத்தை துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுதல், தரவு முறையை பராமரித்தல் தொடர்பில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் 2016ஆம் ஆண்டுடன் காலாவதியாகியது. அதன் பின்னர் இந்தச் செயற்பாட்டுக்காக பெரிய நிதி செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை செய்ய குழுவொன்று நியமிக்கப்படும். பொது மக்களின் நிதியைத் தான்தோன்றித்தனமாக பயன்படுத்தக் கூடாதெனவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ஒ.5,24)



# 28 வருட சிறை

*கொழும்பு ஜன. 10*

10 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கும் மற்றும் கொன்ஸ்டபிள் ஒருவருக்கும் 28 வருட சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# வெறுப்பை விதைப்பது நாட்டின் தலைவர்களே!

## முன்னாள் முதலமைச்சர் கூறுகின்றார்

*மட்டக்களப்பு, ஜன. 10*

நாட்டில் சிறுபான்மையினரைக் குறிவைத்து சரத்பொன்சேகா பேசியிருக்கின்றமை இந்த நாட்டில் தலைவர்களே இனவாத வெறுப்புணர்வை விதைக்கின்றார்கள் என்பதற்கு முன்னுதாரணமாய் அமைந்து விட்டிருக்கின்றது. சரத் பொன்சேகா இத்தகைய இன வெறுப்புப் பேச்சுக்களை நாட்டு நலன்கருதி நிறுத்திக்கொள்ள வேண்டும். என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இலங்கை முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்து சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் ஆற்றிய வெறுப்புப் பேச்சு தொடர்பான எதிர்வினையாற்றும் அறிக்கை ஒன்றை முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் நேற்று வெளியிட்டார்.



அந்த அறிக்கையில், சரத் பொன்சேகாவின் இனவாத வெறுப்புப் பேச்சுக்களை நஸீர் அஹமட் சாடியுள்ளார். நாட்டின் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்கும் உயர் சபை யில் சரத் பொன்சேகா போன்ற தேசிய அரசியல்வாதிகள் இனவாத மதவாத சிந்தனைகளுக்கு உயிரூட்டுவது வெறுக்கத்தக்கது என்றும் கூறியுள்ளார். (த-46)







ஈழத்துச் சிதம்பரம் எனும், வரலாற்றுச்சிறப்பு மிக்க காரைநகர் சிவன் ஆலயத்தின் மார்கழித் தேர்த் திருவிழா நேற்றுக் காலை சிறப்புற இடம்பெற்றது. (சு-21)

## வகுப்பறை திறப்பு

முல்லைத்தீவு,ஜன.10
தென் இலங்கை இளைஞர்கள் இருவர் இணைந்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணியர் வித்தியாசாலைக்குப் பல்லூடக வகுப்பறை ஒன்றை உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

திறன் வகுப்பறைக்கு மேலதிகமாக தொலைக்காட்சி,வானொலி உட்பட்ட உபகரணங்கள் கொண்டதாக அமைக்கப்பட்ட இந்த வகுப்பறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கல்பனா ஜசிந்தன்,தொழில் வழிகாட்டல் அலுவலர் திருமதி சிந்தாமணி ஆனந்தராசா,புதுக்குடியிருப்பு பிரதேச சபை பிரதித் தவிசாளர் கனக சுந்தரசுவாமி ஜனமேஜயந் ஆகியோர்கலந்துகொண்டனர். (ஜ-222)





# சர்வதேசத்தை நோக்கி அஹிம்சை போராட்டம்



**மன்னார், ஜன. 10**
**தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக சர்வதேசத்தை நோக்கி அகிம்சைப் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.**

ஜனாதிபதி கோத்தாபய தனது கொள்கைப் பரப்புரையில் எடுத்த எடுப்பிலேயே 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது; 19ஆவது திருத்தத்தையும் இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டு வருகின்றார் என்பது தெரியவருகிறது.

எனவே இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்காக இறங்கியே ஆகவேண்டிய தேவை உள்ளது.

பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் மேலும் மெருகூட்டப்பட்டு திரும்பப்பெற முடியாத வகையில் அதை உறுதிப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு உள்ளது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் அடிப்படையில் தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவதற்கு இந்தியா தமிழ் மக்களின் பக்கத்தில் நிற்க வேண்டும். ஏனெனில், 13ஆவது திருத்தத்தில் உருப்படியான எதுவும் இல்லை என்றே விடுதலைப்புலிகள் அதை எதிர்த்திருந்தார்கள்.

அதைக்கூட நிறைவேற்றாத இந்திய அரசு மீண்டும் மௌனியாக இருக்கமுடியாது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின் அதன் முழுப்பொறுப்புக்களையும் எடுக்க வேண்டியது இந்திய அரசுதான். அதைவிடுத்து தமிழர்களுக்கு எதிராகக் குரல் உயர்த்தும் பேரினவாதத்துக்கு ஆதரவாக இந்திய அரசு செயற்படக்கூடாது.

தமிழர்களின் மொழி உரிமையைப் பறிக்கும் விதத்தில் அண்மைய தேசிய கீதம் சம்பந்தமான கருத்துக்கள் அமைந்திருந்தன. அவருடன் செயற்படுபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சிறையில் தள்ள வேண்டும் என்று இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்ல பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கிவருவது இந்த நாட்டில் இன நல்லிணக்கத்துக்கு ஒருபோதும் உதவப் போவதில்லை. ஜனாதிபதி எடுத்துவரும் நடவடிக்கைகள் இந்த நாடு ஏற்கனவே இரண்டாகப் பிரிந்து விட்டதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழ் மக்கள் சகலரும் ஒரே குடையின் கீழ் திரண்டு சர்வதேச நாடுகளைநோக்கி ஜனநாயக ரீதியில் எமது போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களும் எம்மால் முற்றுகையிடப்படும் வகையில் நாம் போராட்டங்களை ஜனநாயக ரீதியில் முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் -என்றார். (த-213)



## சைக்கிள் கையளிப்பு

முல்லைத்தீவு,ஜன.10
மக்கள் நலன் காப்பகத்தின் அறிவுச் சோலை சிறப்புத் திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த மாணவி பரஞ்சோதி வளர்நிலாவுக்கு துவிச்சக்கர வண்டி அண்மையில் வழங்கப்பட்டது.


மேற்படி உதவித்திட்டத்துக்கான நிதி அனுசரணையை ஜேர்மன் மக்கள் நலன் காப்பகம் ஊடாக அந்நாட்டின் சுக்காட் மாநிலத்தில் வசிக்கும் கார்த்தி கிருபசிங்கம் தனது பிறந்தநாளை முன்னிட்டு வழங்கியிருந்தார். (ஜ-222)

## பல்வேறு உதவிகள்



*வவுனியா,ஜன.10*
'வவுனியா தமிழ் விருட்சம்' அமைப்பால் நேற்றுமுன்தினம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. வவுனியாவில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உட்பட 10 குடும்பத்தினருக்கு உலர் உணவுப் பொதிகள், 30 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், வசதியற்ற பாடசாலை மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி என்பன வழங்கப்பட்டன.

திருமதி பார்வதிப்பிள்ளை பொன்மணியின் 20 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது கணவர் மற்றும் பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ)



## நவக்கிரக வலம்

நவக்கிரகங்களை ஏழு சுற்றுகள் வலமாக சுற்ற வேண்டும். ஏனெனில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி ஆகிய ஏழு கிரகங்களும் இடமிருந்து வலமாக சுற்றுபவை.

எனவே இந்த ஏழு கிரகங்களையும் நாமும் வலமாகச் சுற்ற வேண்டும். அதே நேரத்தில் ராகுவும், கேதுவும் வலமிருந்து இடமாக வலம் வருபவை. எனவே அடுத்த இரண்டு சுற்றுகளை வலமிருந்து இடமாகச் சுற்ற வேண்டும். இப்படி ஒன்பது முறை நவக்கிரகங்களை சுற்றிவர வேண்டும். எல்லாத் தெய்வங்களையும் வணங்கி முடித்துவிட்டு இறுதியில்தான் நவக்கிரகங்களைச் சுற்றிவர வேண்டும்.

# 2020 புத்தாண்டு பொதுப் பலன்கள்

## சாதகங்களும் 'கவனத்துக்கு' உரியவையும்!



கணிப்பவர்
கே.பி.வித்யாதரன்




### மேடம்

அசுவினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம்

**ராசிக்கு லாப வீடான 11ஆம் வீட்டில் இந்த ஆண்டு பிறப்பதால் நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். எதையும் தைரியமாகச் செயல்படுத்துவீர்கள். ஆழ் மனத்திலிருந்த பயம் நீங்கும். புது வீட்டில் குடிபுகுவீர்கள். குழந்தைப் பாக்கியம் சிலருக்குக் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். சகோதரர் சகோதரிகள் உதவுவார்கள். வழக்கில் வெற்றி உண்டு. பழைய வாகனத்தைத் தந்துவிட்டு புதிய வாகனம் வாங்குவீர்கள்.**

வாக்குத் தவறாதவர் நீங்கள். உங்களின் ராசிக்கு லாப வீட்டில் சந்திரன் நிற்கும்போது புத்தாண்டு பிறப்பதால் வருமானம் உயரும். வருங்காலத் திட்டங்கள் பூர்த்தியாகும். கௌரவப் பொறுப்புகள் தேடி வரும். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். கோயில் திருவிழாவை முன்னின்று நடத்துவீர்கள். மூத்த சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத் தாங்கல்கள் அனைத்தும் நீங்கும். பங்குச்சந்தை மற்றும் பல வழிகளில் பணம் வரும். சகோதரர்களுக்குத் திருமணம் சிறப்பாக முடியும். சேமிக்கத் தொடங்கு வீர்கள். அரைகுறையாக நின்ற வீடு கட்டும் வேலையை இனி விரைந்து முடிப்பீர்கள். திருமணம், புதுமனை புகுதல், மஞ்சள் நீராட்டு, சீமந்தம் எனப் பல விசேஷங்களிலும் உங்களுக்கு முதல் மரியாதை கிடைக்கும்.

உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால், கறாராகத் தான் பேச வேண்டும் என்ற முடிவுக்கு வருவீர்கள்.

ஆடை, ஆபரணங்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்களைப் புதிதாக வாங்குவீர்கள். இந்த ஆண்டு தொடக்கம் முதல் 26.12.2020 வரை சனி பகவான் 9ம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால், சாதிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை வரும். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். மகளின் கல்யாணத்தை வெகு விமர்சையாக நடத்துவீர்கள். மகனுக்கு அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்தில் உயர்கல்வி, உத்தியோகம் அமையும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் 12.11.2020 வரை உங்களின் பாக்கியாதிபதியும் விரயாதிபதியுமான குரு பகவான் 9ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால், பல முறை முயன்றும் முடிக்க முடியாத வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். குழந்தைப் பாக்கியம் சிலருக்குக் கிடைக்கும்.

13.11.2020 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களின் ராசிக்கு 10ஆம் வீட்டில் நுழைவதால் யாருக்கும் பிணைக் கையெழுத்து போட வேண்டாம். ஆண்டு பிறக்கும்போது ராசிக்கு 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைந்திருப்பதால் முன்கோபம் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் வீண் வர்க்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

வருடம் பிறக்கும்போது 3ஆம் வீட்டில் ராகு நிற்பதால் திடீர்ப் பணவரவு உண்டு. சகோதரர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பூர்வீகச் சொத்தை சீரமைப்பீர்கள். சித்தர்கள், ஆன்மிகவாதிகளின் ஆசி கிடைக்கும். செப்ரெம்பர் மாதம் முதல் உங்களின் ராசிக்கு 2ஆம் வீட்டில் ராகுவும், 8ம் வீட்டில் கேதுவும் நுழைவதால் வேலைச்சுமை அதிகரிக்கும்.

### எடுத்த காரியத்தில் வெற்றிவாகை...!

25.10.2020 முதல் 17.11.2020 வரை உள்ள கால கட்டத்தில் சுக்கிரன் 6ம் வீட்டில் சென்று மறைவதால், கணவன் - மனைவிக்குள் கருத்து மோதல் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்; ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத் துச் செல்வது நல்லது.

வியாபாரத்தில் இருப்பவர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டிய காலம் இது. பெரிய முதலீடுகளைப் போட்டு சிக்கிக்கொள்ளாதீர்கள். பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் வருவார்கள். விவசாயிகளுக்கு இந்த ஆண்டு விளைச்சல் பெருகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகளால் பாராட்டப்படுவர். நவம்பர் மாதம் முதல் குரு 10ஆம் வீட்டில் நுழைவதால் பணியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைத்துறையினர் அரசால் பாராட்டப்படுவார்கள்.




## விரும்புங்கள்!

மனிதன் தன் உடம்பினாலும் இயந்திரங்களினாலும் வெளிப்படுகிற வலிமைகளை அறிந்திருக்கிறான். ஆனாலும் பலரும் உணராத, உணர்ந்தும் உணராத மிகப்பெரிய வலிமை மனிதனுக்குள்ளேயே மனமாக இருப்பதை அவன் அறிய வேண்டும்.

ஒரு நிலையை அடைவதற்காக யார் உண்மையோடு உழைத்தாலும் அந்த நிலையை நோக்கி இரண்டடி முன்னேறினால் அவனை நோக்கி அந்த விம்பமும் ஏதாவது தோற்றத்தில் முன்னேறி வருகிறது. அவனுக்கும் அந்த நிலைக்கும் நடுவே இருவரையும் இணைப்பது வாய்ப்புகள்தாம். இதை நன்றாகக் கவனியுங்கள். இந்த வாய்ப்புக்கள்தான் மனத்தின் வலிமை, உழைப்புடன் கூடிய முயற்சிகள் மனத்தில் அவற்றின் வெற்றிபற்றிய கனவுகள் இவையாவுமே கண்களுக்குப் புலப்படாத அலை இயக்கங்களாய் புறப்படுகின்றன. இது உங்களை ஆச்சரியப்படுத்தும் மாயாஜாலம் அல்ல. பண்டைய மகாத்மாக்களின் தத்துவம் தான். ஓரத்தில் இருந்த இவ்வுண்மையை அனுபவத்தில் உணர்ந்து உங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறேன்.


ஒரு விடயத்துக்கு ஆசைப்படுகிறோம். அது தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றாற்போன்று இல்லையென்றாலும் மனம் சும்மா இருக்காது. அப்போதைக்கு அதைக் கனவின் மூலமாவது செயற்படுத்திக் காட்டும். நாளடைவில் நிமிர்ந்தே நிற்கும். விருப்பம், முயற்சி இரண்டும் ஆழ்மனத்தின் சக்தியால் நினைத்த இலக்கை அடைந்தே தீரும்.

எண்ணங்கள் செயலுக்கு வந்தே ஆகவேண்டும் என்பது இறைநியதி. அதனால்தான் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டுமென்றோ வெற்றியடைய வேண்டுமென்றோ எண்ணத்தை மனதில் பிரதிஷ்டை செய்து கனவு காணுங்கள் என்கிறோம்.

உங்களை ஒரு மன்னனாக நினைத்து நடந்து பாருங்கள். ஒரு பிச்சைக்காரனாகவும் நினைத்து நடந்து பாருங்கள். உண்மையில் மன்னனாக நினைத்து நடந்தபோது கம்பீரமாகவே நடந்திருப்பீர்கள். மனம்தான் மார்க்கங்களுக்குத் தலைவாசல் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

மிகச் சரியான விருப்பமும் அதைப் பற்றிய சிந்தனையுமே முயற்சியாக உழைப்பாக வெடிக்கிறது.

உழைப்பும் விடாமுயற்சியும் ஒருபுறம் உடலையும் மறுபுறம் மனத்தையும் வேலை வாங்கும். ஒரு கட்டத்தில் கண்ட கனவுகள் யாவும் நிறைவேறத் தொடங்கும். அந்த அனுபவத்தில் மனத்தின் வலிமையைப்பற்றி அறிந்துகொள்வீர்கள். ஒரு சிறந்த இலட்சியத்தை விரும்புங்கள். அதை அடைந்தது போலக் கனவு காணுங்கள். மொத்தத்தில் மனத்தின் வலிமையைப் புரிந்து கொண்டு பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.



# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்கிறார் ஆளுநர்

எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. மக்கள் வீண் குழப்பம் அடைய வேண்டாம் இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு மகாணத்தில் உள்ள வாகன சாரதிகள் இன்று காலை முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது - என்றுள்ளது. (ம-105)

## தமிழர்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை என்றும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு நிலையான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கவலையுடன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவரின் கவலை எமக்குப் புரிகின்றது. அதேவேளை, அவர் எமது ஜனாதிபதி மீதும் எமது அரசு மீதும் வைத்துள்ள நம்பிக்கையை நாம் பாராட்டுகின்றோம்.

எனினும், தமிழ் மக்களும் தமிழ்த் தலைமைகளும் நூறு வீதம் விரும்புகின்ற அரசியல் தீர்வை எம்மால் வழங்க முடியாது. அவர்கள் பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் சமஷ்டி வழியிலான தீர்வையே விரும்புகின்றார்கள். அப்படியான தீர்வை எம்மால் பெற்றுக்கொடுக்கவே முடியாது. அப்படியான தீர்வுக்குச் சிங்கள மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்கவேமாட்டார்கள்.

எமது நாட்டின் இறையாண்மையையும் ஒற்றையாட்சியையும் நாம் பாதுகாத்தே ஆகவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை விட்டுக்கொடுக்க முடியாது. எனவே, அதற்கமைய அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்' என்றார். (ம-22)

## முன்னணிக்குள்...

யின் 2020ஆம் ஆண்டின் முதலாவது மாதாந்தக் கூட்டம் நேற்றைய தினம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்வாறு இடம்பெற்ற கூட்டத்தின்போது சென்ற கூட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அடுத்த நடவடிக்கைக்காக மதியபோசன இடைவேளை விடப்பட்டது.

இடைவேளை நேரத்தின்போது நடப்பாண்டின் நிலையியல் குழுவை அமைக்க பெயர்கள் பரிந்துரைக்கும் சமயம் தமக்குள் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் மயூரனை அதே கட்சியை சேர்ந்த கிருபாகரன் தொண்டையில் பிடித்து தாக்கினார். அதே கட்சியை சேர்ந்த மற்றுமோர் உறுப்பினரான பத்மமுரளி பெரும் சிரமத்தின் மத்தியில் அதனைத் தடுத்து நிறுத்தினார். சபா மண்டபத்தில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் சக அலுவலக உத்தியோகத்தர்கள் அதனை வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தனர். (ம-90)

## தமிழாராய்ச்சி...

இடம்பெறவுள்ளது.

நான்காவது உலகத் தமிழாராச்சி மாநாடு 1974ஆம் ஆண்டு சு.வித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்றது. மாநாட்டின் இறுதி நாளில் இலங்கைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் துயரச்சம்பவம் நிகழ்ந்து இன்று 46 வருடங்கள் நிறைவடைகிறது. இதில் உயிரிழந்தவர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

## ரணகளமானது...

சபை நடவடிக்கைகள் மிகவும் சுமூகமாகச் சென்ற சமயம் த.தே.கூட்டமைப்பின் உறுப்பினர் ப.தர்சானந் முகநூலில் சாதியம் சார் ரீதியில் பதிவிட்டதாக சர்ச்சை ஏற்படுத்தப்பட்டது.

இதன்போது பதிலளித்த தர்சானந் அது சபைக்கு வெளியிலான செயல்பாடு. அது தொடர்பில் வெளியில் பதிலளிக்கத் தயார் என்று தெரிவித்தார். ஈ.பி.டீ.பி உறுப்பினர் மு.ரெமிடியஸ் அது தனது சாதியத்தை குறித்து தரக் குறைவாக பயன்படுத்திய வாக்கியம் எனக் கூறி சர்ச்சையில் ஈடுபட தர்சானந்தும் பதிலுக்குத் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இவ்வாறு இடம்பெற்ற சர்ச்சையின் நடுவே ரெமிடியஸ் தர்சானந்தை நோக்கி தண்ணீர்ப் போத்தலை வீசியதோடு தாக்கவும் முற்பட்டார். இதன்போது குறிக்கிட்ட மாநகர முதல்வர் சபையின் நாகரீகம் கருதி உறுப்பினர்கள் கௌரவமாக நடந்துகொள்ள வேண்டும். எனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி வெளியேற்றும் நிலைமையை உருவாக்க வேண்டாம் என்றார்.

தொடர்ந்தும் உறுப்பினர்கள் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். இதையடுத்து உறுப்பினர்களின் ஒலிவாங்கிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. அதன் பின்னும்சிறிது நேரம் கூச்சலிட்ட பின்னர் உறுப்பினர்கள் உறுப்பினர்கள் இருக்கைகளில் அமர்ந்தனர். (ம-105)

## எரிபொருள்...

பதற்ற நிலைமை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுவதாக அரச ஊடகப் பேச்சாளர் இராஜாங்க அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அதற்கான மாற்று வழிகள் குறித்து அரசு தீர்மானிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு முன்னரும் இவ்வாறான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு இலங்கை முகங்கொடுத்திருக்கிறது. எனவே இவ்விடயம் பெரிய சவாலாக அமையாது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## 14,022...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 14 ஆயிரத்து 22 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு வீடு வீதம் அமைப்பதே அரசின் முதல்கட்ட இலக்காகவுள்ளது. இதனடிப்படையில் இவ்வருட இறுதிக்குள் 14 ஆயிரத்து 22 வீடுகள் அமைக்கப்படும்.

ஜனாதிபதியின் நாட்டை மேம்படுத்தும் தொலைநோக்கு கொள்கை பிரகடனத்தில் இலங்கையின் அனைத்து குடும்பங்களுக்கும் சிறந்த வசதிகளுடன் கூடிய வீடுகளில் வாழும் வகையில் 'கமட்ட கெயக் ரட்டட்ட ஹெடக்' எனும் திட்டம் 2020ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதமரும் வீடமைப்பு அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய கிராமசேவகர் பிரிவு தோறுமுள்ள ஒரு வறிய குடும்பத்தவருக்கு வீடொன்றை நிர்மாணிப்பதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு அரசாங்கம் 6 இலட்சம் ரூபா நிதியுதவியை நிர்மாணப் பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் தவணைக் கொடுப்பனவாக வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-24)

## அடாத்தாக...

களைத் தொல்லியல் திணைக்களம் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. எனினும் இவற்றில் 52 இடங்களை எவ்வித வர்த்தமானி அறிவிப்புமின்றி, அடாத்தாக தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 10 இடங்களும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 8 இடங்களும், நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 11 இடங்களும், வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 11 இடங்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 12 இடங்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 2 இடங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 5 இடங்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 5 இடங்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 7 இடங்களும், கோப்பாயில் 10 இடங்களும், கரவெட்டியில் 9 இடங்களும், பருத்தித்துறையில் 7 இடங்களும், மருதங்கேணியில் 5 இடங்களும் சாவகச்சேரியில் 3 இடங்களும் தற்போது தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இவற்றிலே 52 இடங்களை வர்த்தமான அறிவித்தல் இல்லாமல் தொல்லியல் திணைக்களமாக்கியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த 52 இடங்களில், 38 இடங்களுக்கு எவ்வித வரைபட அளவுகளோ அல்லது ஆவணங்களோ இல்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-105)

## இன்று...

தால் பூமியில் விழும் சூரியனின் ஒளி சிறிது நேரத்திற்கு சற்றே மங்கிய நிலையில் காணப்படும். கிரகணம் உச்சியில் வரும்போது நிலவின் வெளிப்புற அடுக்கு பூமியின் நிழலில் மீது விழும். மேலும் கிரகணம் உச்சத்தில் இருக்கும்போது 90 சதவிகித நிலவு பூமியால் மறைக்கப்படும். இந்த நிகழ்வால் நிலவின் ஒளி மங்கும், பிறநாட்களில் காட்சியளிப்பது போல இருக்காது. இன்றைய இந்த கிரகண நிகழ்வை இந்தியா மட்டுமல்லாது, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளில் ஏறக்குறைய அனைத்து இடங்களிலும் பார்க்கலாம் என்று நாசா அறிவித்துள்ளது.

இரவு 10.37 மணிக்கு தொடங்கி மறுநாள் அதிகாலை 2.42 மணி வரை கிரகணம் நீடிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. (ம)

## சிங்கள...

னும் எவரும் கைது செய்யப்படவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இன்று காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்கள் பலர் குறித்த வீட்டில் தங்கியுள்ளனர். வீட்டின் மேற்தளத்தில் வாள் ஒன்று இருப்பதாக வீட்டு உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்டது. இதற்கமைய குறித்த வாள் மீட்கப்பட்டுள்ளது. எனினும் அதுபற்றித் தமக்குத் தெரியாது என அங்கு தங்கியிருக்கும் மாணவர்கள் தெரிவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இதுகுறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

அட கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 847
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,621,740/-
வெற்றி இலக்கங்கள்
01 04 32 73 U

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1637
சீட்டிழுப்பு திகதி 09.01.2020
வெற்றி இலக்கங்கள்
22 30 38 49 Y
ரூ.44,353,688/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 09.01.2020
வெற்றி வாரம் 2733
வர்ணம் கபிலம்
கன்னி
வெற்றி இலக்கங்கள்
04 41 47 58
ரூ. 3,104,116/=



## ஆஸ்திரேலியாவில் கடும் வறட்சி

# தண்ணீர் பற்றாக்குறை; ஒட்டகங்களுக்கு வேட்டு!

கன்பெரா. ஜன.10

ஆஸ்திரேலியாவில் தற்போது கடும்வறட்சிநிலவும்நிலையில்அதிக தண்ணீரைக் குடிக்கின்றன என்பதற்காக 10 ஆயிரம் ஒட்டகங்களைச் சுட்டுக் கொல்வதற்கு பிராந்திய அதிகாரிகள் முடிவெடுத்துள்ளனர்.

உலகின் 7 கண்டங்களில் ஒன்றான ஆஸ்திரேலியாவில் 18 சதவீதம் பாலைவனங்களாகும். அதேபோல் அந்த நாட்டின் 35 சதவீதமான பகுதிகள் குறைந்த அளவிலேயே மழையைப் பெறுகின்றன.

உலக வெப்பமயமாதலாலும், அதிகப்படியான வறட்சி காரணமாகவும் கடந்த சில நாள்களாக காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது.

இந்தநிலையில் வறட்சிக் காலங்களில் அதிக அளவு தண்ணீரை குடிப்பதால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒட்டகங்களைச் சுட்டுக் கொல்ல முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தெற்கு ஆஸ்திரேலியாவில் காணப்படும் பெரல் வகை ஒட்டகங்கள் கடுமையான வறட்சிச் காலங்களில் மனிதர்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு வந்து அதிக அளவிலான நீரைக் குடித்து விடுகின்றன. இதனால் மனிதர்களுக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஒட்டகங்களின் கழிவுகளில் இருந்து ஒரு தொன் கார்பன்டை ஒக்சைடுக்கு நிகரான மீத்தேன் வாயு உருவாகின்றது என்றும், இது உலக வெப்பமயமாதலுக்கு முக்கிய காரணமாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஆகையால் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையான ஒட்டகங்களை ஹெலிகொப்டரில் பறந்தபடி சுட்டுக்கொல்ல அரசு முடிவெடுத்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## ஆப்கனில் ஹெலி விபத்து

### இரு படையினர் சாவு

காபூல். ஜன.10

ஆப்கனில் நடந்த ஹெலி விபத்தில் 2 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கனின், பரா மாகாணத்தில் உள்ள போர்சமன் மாவட்டத்தில் இந்த விபத்து நேற்று முன்தினம் நடந்துள்ளது.

எம்ஐ 35 ரக ஹெலியே விபத்துக்குள்ளானது என்றும் அதில் பயணித்த இராணுவத்தைச்சேர்ந்த இருவர் உயிரிழந்தனர் என்றும் அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது. இந்த ஹெலி போர்சமன் மாவட்டத்துக்கு வெடிபொருள்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# பவுடர் உண்ணும் விநோதப் பெண்!



லண்டன். ஜன.10

பிரிட்டனில் உள்ள டெவோன் நகரைச் சேர்ந்தவர் லிசா ஆண்டர்சன். இவர் கடந்த 15 ஆண்டுகளாக முகத்துக்கு பூசும் பவுடரை உண்கிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. 44 வயதான லிசாவுக்கு 5ஆவது குழந்தை பிறந்த பிறகே, அவருக்கு பவுடரைச் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் பவுடரை அவர் விரும்பிச் சாப்பிடுகிறாராம்.

ஆரம்பத்தில் இவர் யாருக்கும் தெரியாமல் குளியலறைக்குச் சென்று ரகசியமாகவே பவுடரைச் சாப்பிட்டு வந்துள்ளார். சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் லிசா குடும்பத்தினருக்கே இந்த விவகாரம் தெரிய வந்துள்ளது. ஆனால் போதைக்கு அடிமையானது போல் பவுடருக்கு அடிமையான அவரை அதில் இருந்து மீட்கத் தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றனர் அவரது குடும்பத்தினர்.

மருத்துவர்களின் உதவியை நாடிய போது இரும்புச் சத்து குறைபாடு மற்றும் வேறு சில நோய் அறிகுறியால் ஏற்பட்டிருக்கும் என்று கூறுகின்றனர். ஆனால் லிசாவுக்கு இதுவரை எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லையெனக்கூறப்படுகிறது. (எ)

# பல்கனியில் உறங்கிய குழந்தை குளிரில் உறைந்து பரிதாப சாவு

மொஸ்கோ. ஜன.10

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் வீட்டின் பல்கனியில் தூங்க வைக்கப்பட்ட 7 மாதக் குழந்தை ஒன்று குளிரில் உறைந்து உயிரிழந்துள்ளது.

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஹபார்வ்ஸ்க் பிராந்தியத்தை சேர்ந்த ஒரு தம்பதி தங்களது 7 மாத ஆண் குழந்தை நல்ல காற்றைச் சுவாசித்து தூங்கவேண்டும் என்பதற்காக வீட்டில் உள்ள பல்கனியில் அமர வைத்தனர். அந்த பகுதியில் கடும் குளிர் நிலவியுள்ளது. குழந்தை அயர்ந்து தூங்கியதும் பெற்றோர் குழந்தையை அப்படியே விட்டுவிட்டு தங்கள் வேலையைப் பார்க்க சென்று விட்டனர். 5 மணி நேரத்துக்கும் மேலாக தனிமையில் விடப்பட்ட அந்த குழந்தை கடும் குளிரால் பரிதாபமாக இறந்தது. ஹைப்போதர்மியாவால் குழந்தை உயிரிழந்தது என்று நம்பப்படுகிறது.

ஹைப்போதர்மியா என்பது கடும் குளிரால் உடலின் வெப்பநிலை மிகவும் குறையும்போது ஏற்படுகிறது. அந்தப் பிராந்தியத்தின் சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "இங்கு நிலவும் கடும் குளிரால் யாரையும் தனியே விடுவது ஆபத்தானது. குறைந்த பட்ச வெப்பநிலையால், குழந்தைகள் விரைவில் பாதிக்கப்படுவார்கள். அதனால் எப்போதும் குழந்தைகள் கண்காணிக்கப்படவேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதற்கிடையே குழந்தையை பல்கனியில் தனிமையில் விட்டுச் சென்ற பெற்றோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)



## இன்றைய நாள்

**மேடம்:** அணுகுமுறையில் நல்ல மாற்றம் ஏற்படும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய நிலை உருவாகும். நிலுவைப் பணம் வசூலாகும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**இடபம்:** சுற்றுப்புற சூழ்நிலை தொந்தரவு தரலாம். பின்விளைவு உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**மிதுனம்:** தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூலம் பலம்பெறும். கூடுதல் பணவரவு கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சமரசத் தீர்வு வரும்.

**கடகம்:** நிகழ்வுகள் மாறுபட்டதாக இருக்கும். நல்லவரையும் தவறாக கருதும் எண்ணம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணி புரிவது அவசியம். பணவரவு குறைந்த அளவில் இருக்கும்.

**சிம்மம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில்,வியாபார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** பொது நல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி இஷ்ட தெய்வ அருளால் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபா ரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும்.

**துலாம்:** தொடர்பில்லாத பணி சிரமம் தரலாம். செயல்களில் முன்யோசனை அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க, நண்பர் உதவுவர். பொருள்கள் இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**விருச்சிகம்:** பணிகள் நிறைவேற தாமதமாகலாம். அனுபவசாலியின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைக் காத்திடுவீர்கள்.

**தனுசு:** மனதில் உருவான திட்டம் செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எதிர்மறையாகப் பேசுபவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** எதார்த்த பேச்சு, சிலர் மனதை பாதிக்கலாம். எதிர்வரும் பணிகளுக்கு, முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரிசெய்வீர்கள்.

**மீனம்:** நிகழ்வுகளால் அதிருப்தி கொள்வீர்கள். நிலுவைப்பணி துரிதமாகச் செயல்பட வைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சீராகும். செலவு அதிகரிக்கும்.



# தண்டவாளத்தை மூடிய சோளம்!

நியூயோர்க், ஜன.10

ரயில் தண்டவாளத்தில் சுமார் அரைக் கிலோமீற்றர் தூரத்துக்கு சோளம் சிந்திக் கிடந்தமையால் அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் எல்லையையொட்டி அமைந்துள்ள அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலத்தில் உள்ள கிரிஸ்டல் நகரின் வழியே செல்லும் கனடா பசிபிக் ரயில் தண்டவாளத்தில் சோளம் சிந்தப்பட்டு தண்டவாளம் முழுவதும் மூடப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட அரைக் கிலோ மீற்றர் தூரத்துக்குத் தண்டவாளம் சோளத்தால் மூடப்பட்டிருந்தது.

அந்த வழியே சென்ற சரக்கு ரயிலில் இருந்து தானியம் சிந்தியிருக்கலாம். சிந்திய சோளத்தின் மதிப்பு 3 ஆயிரத்து 465 டொலராகும். தண்டவாளத்தில் இருந்து சோளத்தை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளோம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# அமைதிக்காக அடங்குகிறோம்

## அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு

வொஷிங்டன், ஜன.10

உலக அமைதியைக் கருத்தில் கொண்டு ஈரான் மீது எந்தவித ராணுவத் தாக்குதலையும் நடத்த விரும்பவில்லை என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


ஈரான் ராணுவத் தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டமைக்கு பதிலடியாக ஈராக்கில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது நேற்றுமுன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதையடுத்து அமெரிக்கா ஈரான் இடையே போர் உருவாகும் சூழ்நிலை நிலவி வந்துள்ளது.

இந்தநிலையில் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் செய்தியாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்தார். அவர் தெரிவித்ததாவது:

ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் அமைதியைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈரான் ராணுவத் தளபதி சுலைமானி ஈடுபட்டார். அதனாலேயே அவரை அமெரிக்கா அழித்தது. ஈரான் மீதோ அல்லது அந்த நாட்டு மக்கள் மீதோ எந்த கோபமும் அமெரிக்காவுக்கு இல்லை.

உலகம் எங்கும் அமைதி நிலவ வேண்டும் என விரும்பும் நாடுகளில் அமெரிக்கா முதன்மையான நாடாகும். அதைக் கருத்தில் கொண்டு ஈரான் மீது எந்தத் தாக்குதலையும் நடத்த விரும்பவில்லை. ஆனால் அந்த நாடு செய்த செயலுக்கான பலனை அவர்கள் கட்டாயம் அனுபவிக்க வேண்டும். ஈரான் மீது தற்போது இருக்கும் பொருளாதாரத் தடையை மேலும் கடுமையாக்க முடிவு செய்திருக்கிறோம். இது தொடர்பான அறிவிப்பு பின்னர் வரும் -என்றார். (எ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 03 . 1941

இறப்பு 07 . 01 . 2020

### வெற்றிவேல்பிள்ளை சக்திவேல்

(நிர்வாக உத்தியோகத்தர், நில அளவைகள் திணைக்களம்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேல்பிள்ளை சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், நில அளவைகள் திணைக்களம்) கடந்த (07.01.2020 ) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல்பிள்ளை - மகமாசி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - கமலசுந்தரி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சித்திரலேகாவின் அன்புக் கணவரும், குமரன் (லண்டன்), லக்ஷ்மி (கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவேந்தினி, பிறேமானந்த் ஆகியோரின் அன்பு மாமனும், வசின்யாவின் அன்புப் பேரனும், செந்தித்துறை (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற புஸ்பவதனா, லஷ்மிபாய் (நியூசிலாந்து), ஞானபண்டிதர் (கொழும்பு), கௌசலாதேவி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர் பா.உதயகுமார்.
ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.
077 508 1025

U.K
0044 - 743 259 9286

(cs.23307) (13.17)

அச்சுவேலி தெற்கு மருத்துவமனைச் சாலை

## அமரர் முத்துக்குமாரசுவாமி திலீபன்

(முகாமையாளர், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை - யாழ்ப்பாணக் கிளை)

அவர்களின்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் திருவாசக இசையர்ச்சனையும்



மண்மகிழ 24.09.1979
கண்நெகிழ 11.12.2019

எமது குடும்பத்தின்
செல்வத்தை இழந்து
நாம் செய்வதறியாது கலங்கி
நின்ற வேளை
ஆயிரக்கணக்கானோராய்
எம்மை நாடி வந்து
ஆறுதலளித்தீர்கள்.
அத்தனை நெஞ்சங்களுக்கும்
நன்றியுடையோம்

காலை 9.30 மணி
தொடக்கம் இடம்பெறும்
திருவாசக இசையர்ச்சனை
மற்றும் அமரர் எழுதிய பங்குச்
சந்தை தொடர்பான
நூல்வெளியீடு என்பவற்றில்
பங்கேற்பதுடன் தொடர்ந்து
இடம்பெறும்
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு
அன்பாக அழைக்கின்றோம்.

ஆத்மசாந்திப் பிரார்த்தனை குறித்த இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றிடுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

**காலம் : 11.01.2020 சனிக்கிழமை காலை 9.30 மணி**
**இடம் : சிவசக்தி மண்டபம், ஆவரங்கால்.**

திருவாசக இசையர்ச்சனை

*குரலிசை* : திரு.அ.அமிர்தலோஜனன், திரு.அ.அமிர்தசிந்துஜன்.
*வயலின்* : திரு.கா.குகபரன்
*மிருதங்கம்* : பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா
*முகர்சிங்* : திரு.சி.செந்தூரன்

குடும்பத்தினர்.

## 41ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 15 . 02 . 1947



மறைவு 01 . 12 . 2019

### அமரர் செல்லையா சின்னத்துரை

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபத்தைத் தெரிவித்ததுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (10.01.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாரதி வீதி,
சங்கானை.

(CS.30319)(11.17)

குடும்பத்தினர்.
சி.ஞானேஸ்வரன்

# இன்றைய ஆட்டங்கள்

சாவகச்சேரி, ஜன.10
தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று காலை 9 மணிக்கு பூப்பந்தாட்டம் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும். (9)

யாழ்ப்பாணம்,ஜன.10
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஜன.10
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஜன.10
தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஜன.10
மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு ஆண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வடமராட்சி கிழக்கு பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)


ஞானரூபன்


நிதர்சன்


யூட்சுபன்


எடிசன்


கஜகோபன்

## பங்களாதேஷில் இடம்பெறவுள்ள

# 'கோல்டன்' கப் தொடரில் வடமாகாண வீரர்கள் ஐவர்

யாழ்ப்பாணம்,ஜன.10
பங்களதேஷில் எதிர்வரும்15 ஆம் திகதி நடைபெறவுள்ள பங்களதேஷ் 'கோல்டன் கப்' கால்பந்தாட்டத் தொடரில் பங்கு பற்றவுள்ள இலங்கை தேசிய கால்பந்தாட்ட 23 பேர் கொண்ட அணியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கஜகோபன்,யூட்சுபன், நிதர்சன், ஞானரூபன், எடிசன் ஆகிய 5 வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். (23)



# விக்கினேஸ்வரா வி.க. வெற்றி

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 4மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# பலாலி விண்மீன் இறுதிக்குத் தகுதி

பரப்பான ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம்.
சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால் பந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் பலாலி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.
ஆரம்பம் முதல் இறுதி வரை பரபரப்புக்கு மத்தியில் இடம்பெற்ற முதல் பாதியாட்டத்தின் 10ஆவது நிமிடங்களில் இமையாணன் மத்தி சார்பாக சாரு முதலாவது கோலைப் பதிவு செய்ய 20ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்து ஆட்டத்தை சமனிலைப்படுத்தினார் பலாலி விளையாட்டுக்கழக வீரர் காண்டீபன். இந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் 1:1 என்ற நிலையில் சமநிலையில் காணப்பட்டது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணியினரும் கோல் போட கங்கணங்கட்டிக்கொண்டு மோதினர்.இந்த நிலையில் வேகமாக செயற்பட்ட பலாலி அணியின் முன்கள வீரர் விஜி கோல் போட ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. ஆட்டத்தின் இறுதியில் மேலதிக கோல்கள் பெறப்படாது போக இறுதியில் 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது பலாலி விளையாட்டுக் கழகம். (108)

# மரதன் ஓட்டப் போட்டி

கொடிகாமம், ஜன. 10
கிளிநொச்சி சிவபாதகலையகம். அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வு போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வாக இல்லங்களுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப்போட்டி நேற்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.
கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும், கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் ஆரம்பித்து பாடசாலையை சென்றடைந்தது.
இதில் ஆண்கள் பிரிவில் முதலமிடத்தை சு. சுகீர்தனும், இரண்டாம் இடத்தை ச.லக்சனும், மூன்றாம் இடத்தை சி.கிருசாந்தும் பெற்றனர்.
பெண்கள் பிரிவில் பா.விதுசயினி முதலாம் இடத்தையும், அ.கனிஸ்ரா இரண்டாம் இடத்தையும், செ சுடரசி மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (159)





## டோனியின் இடத்தை நிரப்ப என்னால் முடியாது

*பாண்டியா இப்படித் தெரிவிப்பு*

ரி-20 உலக கோப்பையில் பினிஷர் ரோலை எதிர்பார்த்து கொண்டிருப்பதாகவும், அதேவேளையில் டோனியின் இடத்தை நிரப்ப முடியாது எனவும் பாண்டியா தெரிவித்துள்ளார்.
இந்த வருடம் ஆஸ்திரேலியாவில் ரி-20 உலக கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ளது. இந்திய அணியில் பினிஷர் ரோலை திறம்பட செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் பாண்டியா உள்ளார். அதேவேளையில் டோனி இடத்தை என்னால் ஒருபோதும் நிரப்ப முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
பினிஷிங் ரோலில் டோனியின் இடத்தை என்னால் ஒருபோதும் நிரப்ப முடியாது. ஆகவே, அதுபற்றி நான் நினைக்கவே இல்லை. அந்த சவாலை எதிர்கொள்ள மிகவும் ஆர்வமாக உள்ளேன்.
நான் செய்தாலும் அது அணியின் வெற்றிக்காகத்தான் இருக்கும் என்பது உங்களுக்கு தெரியும். நான் ஏணியில் ஒரு அடி எடுத்து வைத்தாலும், அதை மெது மெதுவாகத்தான் வைப்பேன். ஏனென்றால், கோப்பை அங்கு இருக்கிறது-என்றார்.

# ஒருநாள் போட்டியிலிருந்து டோனி தானாகவே விலகுவார்

*ரவிசாஸ்திரி பரபரப்பு*



சாதனைக் கேப்டனாக திகழ்ந்த எம் எஸ் டோனி, விரைவில் அவரது ஒரு நாள் கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொள்வார் என்று ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.
இந்திய கிரிக்கெட்டில் சாதனைக் கேப்டனாக திகழ்ந்தவர் எம்எஸ் டோனி. ஐசிசியின் அனைத்து வகை தொடர்களிலும் சம்பியன் பட்டம் வென்ற ஒரே இந்திய கேப்டன் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இறுதியாக இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி இருந்தார். அதன்பின் கிரிக்கெட்டில் இருந்து விலகி இருக்கிறார்.
மீண்டும் எம்எஸ் டோனி எப்போது கிரிக்கெட்டிற்கு திரும்புவார் என்ற கேள்வி ரசிகர்களுக்குள் இருந்து கொண்டே வருகிறது.
இந்த நிலையில் டோனி அவரது ஒரு நாள் கிரிக்கெட் வாழ்க்கையை விரைவில் முடித்துக் கொள்வார் என்று தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
நான் டோனியுடன் பேசினேன்.
அவர் டெஸ்ட் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். அதேபோல் ஒருநாள் வாழ்க்கையையும் விரைவில் முடித்துக் கொள்வார். தற்போது அவரது வயதில் ரி-20 கிரிக்கெட் போட்டியில் மட்டுமே விளையாட முடியும். ஐபிஎல் தொடரில் விளையாடும்போது அவரது உடல் எப்படி ஒத்துழைக்கிறது என்பதை பார்க்க வேண்டும்.
அவர் ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடுவார். ஒரு விடயம் எனக்கு நன்றாகத் தெரியும், அது என்னவென்றால், அவராகவே அணிக்கு திரும்ப நினைக்க மாட்டார். ஆனால் ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடினால் யோசிக்கலாம் - என்றார்.



## சென் நியூஸ்ரார் வாகை

யாழ்ப்பாணம், ஜன.10
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் சென் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஓர் கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சென்நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## இசுறு உதான விலகல்

இன்று இடம்பெறும் மூன்றாவது ரி-20 போட்டியில் சகலதுறை ஆட்டக்காரர் இசுறு உதான விளையாட மாட்டார் என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.
இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ரி -20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் இன்று இடம்பெறும் இறுதிப் போட்டியில் இலங்கை அணி வீரர் இசுறு உதான விளையாட மாட்டார் என இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.
இவர் கடந்த போட்டியின் போது களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த சமயம் முதுகுப் பகுதியில் ஏற்பட்டிருந்த வலி காரணமாக இந்தப் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.



## அண்டர்சன் காயத்தால் விலகல்

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் காயம் காரணமாக தென்னாபிரிக்கா தொடரில் இருந்து விலகியுள்ளார்.
இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டியிலும் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் காணப்படுகின்றன. இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி இடம் பெறவுள்ளது.
இறுதி 2 டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து வேகப்பந்து வீரர் அண்டர்சன் ஆட மாட்டார். இடது விலா எலும்பில் ஏற்பட்ட காயத்தால் அவர் விலகியுள்ளார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இது இங்கிலாந்துக்கு பெரும் பின்னடைவாகும்.



## இலங்கை - இந்திய இறுதி ரி-20 இன்று

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டி இன்று புனேயில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில் இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இறுதிப் போட்டி இன்று இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் இலங்கை அணி கட்டாயம் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இலங்கை அணி வெற்றி பெற்றால் 1:1 என்ற கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடையும். இல்லையெனில் இந்திய அணி தொடரைக் கைப்பற்றும்.




# ரியல் மட்ரிட் அபார வெற்றி

ஐரோப்பிய கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரின் சுப்பர் கோப்பா கிண்ணத் துக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட் 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் - வலன்சியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற முதல் பாதியாட்டம் ஆரம்பித்த 15ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் கிரோஸ் முதலாவது கோலைப் போட ஆட்டம் சூடு பிடித்தது. அடுத்த 39ஆவது நிமிடத்தில் அதே அணி வீரர் ஐகோ ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் காணப் பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் வலன்சியா அணி வீரர்கள் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தினர். எனினும் ஆட்டம் ஆரம்பித்த 20ஆவது நிமிடத்தில் மீண்டும் ரியல் மட்ரிட் அணி வீரர் ஒரு கோலைப் போட அணி உற்சாகமானது. ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் வலன்சியா அணிக்குக் கிடைத்த பெனால்ட்டி வாய்ப்பைப் பயன் படுத்தி அந்த அணி வீரர் பாரியோ கோலாக மாற்ற இறுதியில் ரியல் மட்ரிட் அணி 3:1 என்ற கணக்கில் வலன் சியா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

வலன்சியா அணிக்கு 7 தடவைகள் கோனர் முறையில் கோல்கள் போடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் அவர்கள் அதனைச் சரியாப் பயன்படுத்த வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது அரையிறுதியாட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

**வீடு வாடகைக்கு**

யாழ் இந்துக்கல்லூரிக்கு அண்மையாக 2 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது.

071 377 4860, 076 573 5329

**சீரடி பாபா யாத்திரை**

ஆரம்பம் 25.01.2020 சீரடி பாபா தரிசனம் 2 நாட்கள் பாபா சார்பான 7 பல இடங்கள் சனி சிங்கனாப்பூர் திரியம்பகேஸ்வரீர். ஜோதிலிங்கம் பஞ்சவடி. நாசிக் 6 இடங்கள் தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற 6 பாபா ஆலயங்கள். தரிசிப்பதுடன் மேல் மருவத்தூரும் தரிசிக்கலாம் 1 நாள் சென்னையில் சொப்பிங் 4 வழி விமான ரிக்கட். 3 வேளை சுத்தமான சைவஉணவு. தங்குமிடம் காப்பி. ரீ. A/C. வாகனவசதி. குடிநீர் உட்பட நாட்கள் 7 விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
077 768 0102, 077 736 2154

**பகல்/ இரவு கடமை காவலாளி தேவை**

இரவு/ பகல் கடமை செய்யக்கூடிய காவலாளி (Security) தேவை. நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

நேரில் வரவும்:
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, (யாழ். பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணம்) 021 222 6069

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி

ஆரம்பமாகி விட்டது
தொழில்நுட்பப் பிரவு
புதிய பிரிவு A/L 2022
DAY CLASS A/L 2020
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் 077 248 7774

உச்சிப்பிள்ளையார் துணை

**தென்னிந்திய யாத்திரை**

ஆரம்பம் :- 03.02.2020 நாள்கள் :-16

தமிழ்நாடு. ஆந்திரா. கர்நாடகா. கேரளா. பாண்டிச்சேரி ஊடான யாத்திரை. உச்சிப்பிள்ளையார் 9 நவக்கிரக ஆலயங்கள். பஞ்சபூதத் திருத்தலங்கள். ஆறுபடைமுருகன். குருவாரூர். திருப்பதி. மதுரைமீனாட்சி. இராமேஸ்வரம் உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.

ஸ்ரீரங்கநாதன் - 077 768 0102, ராஜன் - 077 736 2154

**சிங்கப்பூர், மலேசியா சுற்றுலா**

மலேசியா. சிங்கப்பூர் சுற்றுலா ஆரம்பம் 23.02.2020. 5 இரவு 6 நாள்கள். அனைத்து செலவுகள் உட்பட விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. உணவு பொபே. சைவம். அசைவம். தங்குமிடங்கள் 4ஸ்ரார் அறைகள். விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க. 077 768 0102, 077 736 2154

**காசி சீரடி யாத்திரை**

ஆரம்பம் :- 03.03.2020 நாள்கள் :-15 யாத்திரீகர் - 15

டெல்லி நாராயணர் உட்பட சுற்றிப்பார்த்தல். ஆக்ரா தாஜ்மகால் மதுரா கிருஸ்ணஜென்மபூமி பிரேம்மந்திர் அலகாபாத் திருவேணிசங்கமம். கயா சிரார்த்தம் செய்யுமிடம் காசியில் 15 இடங்கள் புத்தகாயா. இராமேஸ்வரம். சீரடிபாபா. சனிதிங்கனாப்பூர் திரியம்பகேஸ்வரர் ஜோதிலிங்கம். நாசிக் பஞ்சவடி உத்திர கோசமங்கை. காளபைரவர் உட்பட விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. உணவு சுத்தமான சைவ உணவு. அனைத்து செலவுகளும் உட்பட

**யாத்திரையில் எமது சேவை**

இருவழி விமான ரிக்கட் மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு காப்பி. ரீ. குடிநீர். தரமான தங்குமிடம் 2பேருக்கு வெஸ்ரன் கொமட் குளியலறை. கட்டில் மெத்தை. இணைந்த அறைகள் AC வாகன வசதி. யாழ். கொழும்பு வாகன வசதி செய்து தரப்படும்.

கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
Email:- sriranganathan2601@gmail.com
Face book:- sridevisriranganathanthuraiappa
077 736 2154, 077 768 0102

## ஆஸ்திரேலிய அணியுடன் மோதி வெற்றி பெற்றது மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம். ஜன.10

ஆஸ்திரேலிய வெண்டிலீக்ஸ் பிராந்திய 13 வயதின் கீழ் கிரிக்கெட் அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி 13 வயதின் கீழான கிரிக்கெட் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி ஒன்று அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டுப்படுத்தப்பட்ட 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய வெண்டிலீக்ஸ் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களை மாத்திமே பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 30 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

மத்திய கல்லூரி அணி சார்பில் கெவின் 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஆட்டநாயகனாக யாழ். மத்திய கல்லூரி அணி வீரர் கெவினும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ் மத்திய கல்லூரி அணி வீரன் ஷெரோனும் தெரிவு செய்யப்பட்டனர். (ந)

## இந்திய ரசிகர்களை காண ஆர்வமாக உள்ளேன்

### வோர்னர் நெகிழ்ச்சி

நாங்கள் இந்தியா செல்கின்றோம், இந்திய ரசிகர்களை பார்க்கும் ஆவலில் உள்ளேன் என ஆஸ்திரேலிய தொடக்க வீரர் டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் இறுதி ரி-20 கிரிக்கெட் போட்டி இன்று நடக்கிறது. இந்த போட்டி முடிந்த பின்னர் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்கு செல்கின்றது. முதல் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதற்கான ஆஸ்திரேலிய அணி இன்று இந்தியாவுக்கு வருவதற்காக விமானம் ஏறியுள்ளனர்.

இது குறித்து வோர்னர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவிக்கையில்:

நாங்கள் இந்தியா வருகிறோம். 3 போட்டிகள் கொண்ட தொடர் சிறப்பானதாக இருக்க போகிறது. எங்களுடைய அனைத்து இந்திய ரசிகர்களையும் பார்க்க ஆவலாக உள்ளோம் என்று பதிவிட்டுள்ளார்.

கடந்த முறை வோர்னர் இல்லாமல் இந்தியா வந்த ஆஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் 3:2 என கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

### 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட

## சிம்பாப்வேக்கு பறக்கும் இலங்கை அணி

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணி சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

அரசியல் தலையீடு காரணமாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை பல பிரச்சனைகளை சந்தித்தது. இதனால் ஐசிசி அந்த அணிக்கு தடைவிதித்தது. அதன்பின் தடையை விலக்கிக்கொண்டது.

சிம்பாப்வே அணியின் நிர்வாகத்தை முற்றிலும் மாற்றிய மைக்க தீவிரம் காட்டப்பட்டது. இதனடிப்படையில்தான் ரி-20 மற்றும் ஒரு நாள் போட்டிக்கான கேப்டனாக சிபாபாவையும், டெஸ்ட் அணிக்கு சீன் வில்லியம்ஸையும் கேப்டனாகவும் நியமித்தது. முந்தைய கேப்டன் மசகட்சா இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை அணி சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது.

முதல் டெஸ்ட் போட்டி வரும் 19- 23ஆம் திகதி வரையும், 2ஆவது டெஸ்ட் போட்டி 27-31ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.